விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 06 செவ்வாய்க்கிழமை (22.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 246

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## வடக்கு - கிழக்கு மக்களுக்கு
# 50 ஆயிரம் கல்வீடுகள்
## விண்ணப்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காக, அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக, தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

30 வருட காலம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதற்கான வேலைத்திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாக பிர 24☛

## வடக்கில் 1700 பேர் ஆசிரியர் சேவைக்கு
## அபிவிருத்தி உதவியாளர்களாக
# 20 ஆயிரம் பட்டதாரிகள்

(மட்டக்களப்பு)

20 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் அபிவிருத்தி உதவியாளர்களாக நியமிக்கப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்குஅவர் மேலும் தெரிவித்தாவது,

பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்குவது நாட்டின் கடன்சுமையாலேயே தாமதமாகிவிட்டது என்ற அவர்,

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் வேலை 24☛

## வடமராட்சி பகுதியில்
# விசேட அதிரடிப்படை மீண்டும் களமிறக்கம்

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதிக்கு மீண்டும் விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு சுற்று ரோந்து நடவடிக்கைகளும், வீதிச் சோதனைகளும நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த மாதம் 9ஆம் திகதி சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் மீது குடத்தனைப் பகுதியில் வைத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த யோகராசா தினேஸ் என்ற இளைஞர் 23☛

# டெனீஸின் இடத்துக்கு விந்தனை நியமிக்குக
## முதலமைச்சருக்கு ரெலோ கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ)த்தின் தலைமைக் குழுவினால் நேற்று முன்தினம் எடுக்கப்பட்டுள்ள முடிவின் பிரகாரம் கட்சியின் செயலாளர் நாயகம் ந.ஸ்ரீகாந்தா, முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வட மாகாண முதலமைச்சர் மீது நம்பிக்கை இழந்துவிட்டதாக தெரிவித்து, வடமாகாண ஆளுநரிடம் சமீபத்தில் கையளிக் 24☛

## அ.தி.மு.க இணைந்தது; துணை முதல்வரானார் ஓ.பன்னீர்செல்வம்



(சென்னை)

நீண்ட இழுபறிக்குப் பின்னர் ஓ.பி.எஸ் - இ.பி.எஸ் அணிகள் ராயப்பேட்டையில் உள்ள 24☛

## ஐ.நா தீர்மானத்தை முழுமையாக செயற்படுத்துக!
### ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப் 24☛

## அரசியல் கைதிகளின் தொடரும் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் மூன்று பேரையும் நேற்றைய தினம் மனித உரிமை ஆணைக் குழுவின் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டுள் 24☛

## வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகவில்லை
### பரீட்சைத் திணைக்களம்

(கொழும்பு)

பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த உயர்தர விஞ்ஞானப் பரீட்சைக்கான வினாத்தாள் முற்கூட்டியே வெளியான சம்பவத்தில் 24☛

## செப். முதல் வாரத்தில் இடைக்கால அறிக்கை
# சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்
# சிங்கள மக்களிடம் பிரசாரம்
## கூட்டமைப்பிடம் உறுதியளித்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

செப்ரெம்பர் முதல் வாரத்தில் புதிய அரசியல் அமைப்புக்கான இடைக்கால அறிக்கை அரசியல் அமைப்பு பேரவைக்கு பாரப்படுத்தப்படும். அதன் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு என வரும்போது புதிய அரசியல் அமைப்பை தோற்றுப்போக விட முடியாது. ஆகையால் இரண்டு பிரதான கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன தத்தம் மக்களிடமிறங்கி தீவிர பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டுக்கொண்டுள்ளார்.(24-ம் பக்.)

முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்
எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 முதல் 11.30 வரை
Tilko City Hotel - Jaffna
முன்பதிவுகளுக்கு:- 021 222 1455, 077 782 2014 & Type Stock and SMS
துறைசார் நிபுணர்களின் சிறப்புக் கருத்துப் பகிர்வுகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சிறப்புப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்.
அனுமதி இலவசம் - மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள் | அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்
CSE
COLOMBO STOCK EXCHANGE
(C-9389)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய தரவுகளை கொண்டு இன விகிதாசாரம் பேசக்கூடாது - சம்பந்தர்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் போரால் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் இன்னும் முழுமையாக இங்கு வரவில்லை. இந்த நிலைமையில் தற்போதுள்ள புள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டு இனவிகிதாசாரம் பற்றிப் பேசக் கூடாது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

நாட்டை விட்டு மக்கள் வெளியேறுவதற்கு முன் அமைதிச் சூழல் ஏற்பட்ட காலத்தில் இருந்த விகிதாசாரங்களை வைத்தே பேச வேண்டியது உசிதம் என நான் விரும்புகின்றேன்.

1983ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தின் இன விகிதாசாரமானது தமிழர்கள்-42 சதவீதம் முஸ்லீம்கள-32 சதவீதம் சிங்களவர்கள்-26 சதவீதமாக இருந்துள்ளது.

நாட்டில் எற்பட்ட போரின் காரணமாக திருகோணமலையில் இருந்து இந்தியாவுக்கு பலர் இடம்பெயர்ந்துள்ளார்கள். இவர்கள் முழுமையாக வந்து சேரவில்லை. இது போல ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களும் நாட்டுக்கு முழுமையாக வந்து சேரவில்லை. இந்த நிலையிலே இன்று புள்ளி விபரம் மாறியுள்ளது. எனவே தற்போதைய நிலையை மட்டும் வைத்துக் கொண்டு புள்ளி விபரங்களைப் பேசக் கூடாது

இந்த ஆண்டு மிக முக்கியமான ஆண்டாக இருக்கக் கூடும். காரணம் பல தேர்தல்களை சந்திக்க வாய்ப்புள்ளது. கூட்டரசின் அரைவாசி காலம் இவ்வாண்டுடன் முடிவடையவுள்ளது.

ஆகவே அபிவிருத்திப் பணிகளை விரைவாக செய்து முடிக்க வேண்டிய தருவாயிலும் நாம் உள்ளோம் என்றார்.

மாவட்டச் செயலர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் பிரதி அமைச்சர் சுசுந்த புஞ்சி நிலமே நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்துல்லா மகரூப், இம்ரான் மகரூப், எம்.எஸ்.தௌபிக் க.துரைரெட்ணசிங்கம் மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (மு-11)

# காணிப் பிணக்குகளை தீர்க்கும் விசேட மத்தியஸ்த சபைக் கூட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் காணிப்பிணக்குகளை தீர்ப்பதற்கென அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபையை (காணி) நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப கூட்டம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அதனை தொடர்ந்து பொது மக்களின் காணி பிணக்குகளை தீர்ப்பதற்காக குறித்த விசேட மத்தியஸ்த சபை மாதம் ஒன்றுக்கு 4 தடவைகள் நடைபெறும் எனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபைகளின் (காணி) மத்தியஸ்தர்களுக்கான நியமனம் கடந்த வருடம் மே மாதம் 27ஆம் திகதி நீதி அமைச்சால் வழங்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபையில் (காணி) 27 மத்தியஸ்தர்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட மத்தியஸ்த சபையில் (காணி) 17 மத்தியஸ்தர்களுக்கும் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

குறித்த சபை அமைக்கப்பட்டு ஒன்றரை வருடங்கள் கழிந்த நிலையிலும் பல்வேறு பிரச்சினைகளை காரணம் காட்டி குறித்த சபை இயங்கவில்லை. அதன் காரணமாக பொதுமக்கள் விசனம் தெரிவித்தும் இருந்தனர். இது தொடர்பில் வலம்புரி பத்திரிகையிலும் செய்திகள் பிரசுரமாகியிருந்தன. அதனடிப்படையில் பல தாமதங்களுக்கு மத்தியில் அடுத்த வாரமளவில் குறித்த சபை ஆரம்பிக்கப்படவுள்ளது.

27 பேர் கொண்ட மத்தியஸ்தர் சபையில் 3 பேர் உள்ளிட்ட 9 குழுக்களாக பிரிந்து மாதாந்தம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் குறித்த காணி மத்தியஸ்த சபை இயங்கவுள்ளது.

வடக்கில் அதிகமாக காணிப்பிரச்சினைகள் உள்ளன. அப்பிரச்சினைகளை தீர்த்து மக்களை ஒரு சுமுகமான நிலைக்கு கொண்டு வருவதற்காக நீதி அமைச்சு இந்த விசேட மத்தியஸ்த சபையை ஆரம்பித்திருந்தது. அத்துடன் இச்சபை அதிகாரம் வாய்ந்த சபையாகவும் காணிப்பிணக்குகளை தீர்ப்பதில் ஒரு வலுவான செயற்பாட்டை ஏற்படுத்துவதுடன் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பயனுள்ள சபையாக இயங்கும் என தெரிவிக்கப்பட்டது. எனவே இச்சபையின் சேவையை பொதுமக்கள் மிக ஆர்வத்துடன் எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(மு-9)

# மல்லாகம் நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு அதே நீதிமன்றால் பிடியாணை பிறப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு எதிராக அதே நீதிமன்றினால் நேற்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பெண் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராக தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் முறையீட்டாளராக உள்ள குறித்த பதிவாளர் நேற்றைய தினம் வழக்கு விசாரணைக்கு சமுகமளிக்கத் தவறியிருந்தார். இதனைத் தொடர்ந்து அவரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு பிடியாணை வழங்கி பதில் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் உத்தரவிட்டார்.

தன்னுடைய உத்தியோகபூர்வ தொலைபேசியில் குறித்த சட்டத்தரணி ஷர்மினி விக்னேஸ்வரன் தன்னை அச்சுறுத்தியதாக மல்லாகம் நீதவான் நீதிமன்றப் பதிவாளர் ஆனந்தராசா நந்தினிதேவி செய்த முறைப்பாட்டின் பேரில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வழக்கில் குறித்த சட்டத்தரணி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த தவணை குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட சட்டத்தரணி குற்றச்சாட்டினை மறுத்ததை அடுத்து, வழக்கு விசாரணை நேற்றைய தினத்திற்கு நிச்சயிக்கப்பட்டிருந்தது. நேற்று இவ்வழக்கு பதில் நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது, வழக்கின் முதலாம் சாட்சியான நீதிமன்ற பதிவாளர் நந்தினிதேவி சமுகமளித்திருக்கவில்லை. குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் குறித்த சாட்சிக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்புக் கட்டளை கையளிக்கப்பட்டதா என்று கேள்வி எழுப்பினார்.

தெல்லிப்பழை பொலிஸாரின் சார்பில் ஆஜராகி இருந்த பொலஸ் சார்ஜன்ட் பாலித, அழைப்புக் கட்டளை சாட்சியிடம் நேரில் கையளிககப்பட்டதாகவும், அது தொடர்பான அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் நீதவானிடம் தெரிவித்தார். அழைப்புக் கட்டளை கையளிக்கப்பட்டும் குறித்த சாட்சி சமுகமளிக்காததால் அவருக்கு எதிராக பிடியாணைக்கு உத்தரவிடுமாறு ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றைக் கோரினார. அவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பதில் நீதவான் குறித்த சாட்சியான நீதிமன்றப் பதிவாளருக்கு எதிராக பிடியாணைக்கு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை எதிர்வரும் புரட்டாதி மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

குற்றஞ்சாட்டப்பட்டவரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கு அனுசரணையாக சட்டத்தரணிகள் கே.எஸ்.பாலகிருஷ்ணன், கே.சயந்தன் ஆகியோரும் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-4)

# பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களில் ஒருவரின் குடும்பத்திற்கு வீட்டிற்கான அடிக்கல்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ்.பல்கலைக்கழக மாணவன் சுலக்சனுடைய குடும்பத்தினருக்கு வீடு அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில் இன்றைய தினம் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் குளப்பிட்டி பகுதியில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி யாழ்.பல்கலை மாணவர்களான கலைப்பீடத்தில் 3ஆம் வருடத்தில் கல்வி கற்கும் கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா கஜன் (வயது 23), சுன்னாகத்தைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்ஸன் (வயது 24) ஆகியோர் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

இவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக பல்வேறு தரப்பினரும் தமது கண்டனத்தை தெரிவித்து பல்வேறு ஆர்பாட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர். குறித்த இரு மாணவர்களின் குடும்ப நிலையை கருத்தில் கொண்டு அவர்களின் மரணத்துக்கு நீதி வேண்டும் எனவும் அவர்களின் குடும்பங்களுக்கு தேவையான இழப்பீடுகள் வழங்க வேண்டும் எனவும் பல தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தநிலையில் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், மீள்குடியேற்ற அமைச்சர் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் பலரால் குறித்த குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடுகள் வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் எந்தவிதமான உதவிகளும் குறித்த குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் மாணவர்களின் இறப்புக்கு நீதியும் வழங்கப்படவில்லை எனவும் பல தரப்பினராலும் விமர்சிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அப்பிரதேச மக்களால் கண்டன ஆர்ப்பாட்டமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில், உயிரிழந்த மாணவர்களில் ஒருவரான சுலக்சனின் குடும்பத்தினருக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டியில் 5 இலட்சம் பெறுமதியான காணி வழங்கப்பட்டுள்ளதுடன் இன்றைய தினம் 9.5 லட்சம் பெறுமதியான வீட்டுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. இந்த வீட்டினை இராணுவத்தினரே அமைக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-4.9)

# மொனராகலை பிக்கு யாழ்.பொலிஸில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

மொனராகலையில் உள்ள பிக்கு ஒருவர் மனநிலை குழம்பிய நிலையில் யாழ் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள தண்டவாளத்தில் அரை நிர்வாண நிலையில் இருந்து மீண்டு யாழ்.பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

குறித்த 17 வயதுடைய பிக்கு மொனராகலையில் உள்ள ஒரு பௌத்த பீடத்தில் கற்று வருவதாகவும் நேற்று முன்தினம் தான் திடீரென நினைவிழந்து காணப்பட்டதாகவும். பின்னர் நேற்றைய தினம் காலை யாழ் ரயில் நிலையத்துக்கு அருகில் இருந்த தண்டவாளத்தில் ஆடைகள் அற்ற நிலையில் இருந்ததை உணர்ந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பின்னர் தான் அருகில் உள்ள வீட்டுக்கு சென்று ஆடை ஒன்றை பெற்று அணிந்து கொண்டதாகவும் அங்கிருந்து யாழ் பொலிஸ் நிலையத்தில் தன்னை கொண்டு சென்று சேர்த்து விடுமாறு கோரிய போது, அவரை யாழ் பேருந்து நிலையத்தில் கொண்டு வந்து சிலர் விட்டு விட்டு சென்றுள்ளனர் என்றும் தான் பின்னர் வேறு நபர்களிடம் விசாரித்து பொலிஸ் நிலையத்துக்கு வந்ததாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இவருடைய பெற்றோர் மற்றும் விகாராதிபதிக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் குறித்த பிக்குவை அழைத்து செல்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு இன்றைய தினம் வரவுள்ளனர். (மு-6)


**நாய்க்குட்டி விற்பனைக்கு**

நல்ல இன பெமேரியன் நாய்க் குட்டிகள் (01 வயது) விற்பனைக் குண்டு.

0769176049

(சீ-9396)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






## நல்லூர்க் கந்தன் தீர்த்தத் திருவிழா

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா நேற்றுக்காலை வெகு விமர்சையாக இடம்பெற்றது.

கடந்த மாதம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமான நல்லூரக் கந்தனின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் லட்சோபலட்சம் அடியவர்களின் வருகையுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிலையில் நேற்று இடம்பெற்ற தீர்த்தத் திருவிழாவின் போதும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் படையெடுத்திருந்தனர்.





# பாதாள உலகக் குழுக்களை ஒடுக்க ஆயிரம் பேருடன் விசேட படையணி

(கொழும்பு)

நாட்டில் பரவலடைந்துள்ள பாதாள உலக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் பாதாள உலகக்குழுவை ஒடுக்கவும் விசேட அதிரடிப் படையில் 1000 பேர் கொண்ட சிறப்புப் படையணி ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த 1000 பேர் கொண்ட படையணியில் உள்வாங்கப்படும் உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போதைப்பொருள் தடுப்பு மற்றும் பாதாள உலகத்தை ஒடுக்கல் ஆகிய பணிகளுக்காக கடந்தவாரம் விசேட பொலிஸ் படையணியானது' பொலிஸ் விசேட அதிரடிப் படையில் ஏற்படுத்தப்பட்ட நிலையிலேயே அதன் கீழ் வரும் இந்த 1000 பேர் கொண்ட விசேட படையணி ஏற்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், அந்தப் படையணியில் இணைத்துக் கொள்ளப்படுவோருக்கு போதைப் பொருள்தடுப்பு பாதாள உலகக்கட்டுப்பாட்டு உபாயம் என்பன தொடர்பில் சிறப்பு பயிற்சிகளும் அளிக்கப்படவுள்ளன.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் விசேட அதிரடிப்படை கட்டளைத் தளபதி சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் எம்.ஆர்.லத்தீபின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ-7)

## புதிய பதவியில் விஜேகுணரத்ன



ஜனாதிபதி மற்றும் முப்படைகளின் தளபதியான மைத்திரிபால சிறிசேனவினால் புதிய பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரியாக வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் பிரகாரம் இவர் அட்மிரல் பதவிக்கு உயர்த்தப்பட்ட பின் தனது பதவியினை இன்று உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கவுள்ளார்.

வைஸ் அட்மிரல் ரவிந்திர விஜேகுணரத்ன பாதுகாப்பு படைகளின் பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ள 02 ஆவது கடற்படை தளபதி என்பதுடன், இவர் இப்பதவிக்காக நியமிக்கப்பட்ட 07 ஆவது பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரியாவார்.

பாதுகாப்பு படைகளின் அதிகாரி பதவியானது இலங்கை பாதுகாப்பு படைகளிலுள்ள உயர்ந்த பதவி என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## A/L; வினாத்தாளை வெளியிட்ட ஆசிரியரின் உறவினர்கள் கைது

உயர்தர இரசாயனவியல் வினாத்தாளை வெளியிட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தின் பரீட்சை நிலையம் ஒன்றின் அருகில் இரசாயனவியல் வினாத்தாளிலுள்ள வினாக்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த ஆசிரியருடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரான ஆசிரியரின் தந்தை மற்றும் சகோதரன் ஆகியோர் கந்தானை பிரதேசத்திலுள்ள தமது வீட்டில் வைத்து குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கைது செய்யப்பட்டவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் பிரதான சந்தேக நபரான ஆசிரியர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவரை தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## குற்றங்களுக்கு தீர்வு காண்பது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் பூஜித விசேட அறிவிப்பு

(கொழும்பு)

பதிவாகியுள்ள குற்றங்கள் மற்றும் முறைபாடுகளில் 75 சதவீதமானவற்றை இந்த ஆண்டுக்குள் தீர்க்க வேண்டும் என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில், பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறை விடுதியொன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தனது நேற்றைய, இன்றைய மற்றும் நாளைய கடமை என்றும் அவர் கூறியுள்ளார்.

இரண்டாவதாக குற்றங்களைத் தடுக்கவும் அவற்றைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பதிவு செய்யப்பட்டுள்ள குற்றங்களில் இந்த ஆண்டுக்குள் 75 வீதமானவற்றுக்கு தீர்வு காண வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (இ-7)

## உதயங்கவின் கோரிக்கையை நேற்று நிராகரித்தது நீதிமன்றம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதுவராக பணியாற்றிய உதயங்க வீரதுங்கவின் சட்டத்தரணி விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள சர்வதேச பிடியாணையைத் திரும்பப் பெறுமாறும் வெளிநாடுகளுக்கு பயணிக்க அவருக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறும் சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.

எனினும் இந்த கோரிக்கையை கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன நிராகரித்துள்ளார். கோரிக்கையை நிராகரித்த நீதவான், உதயங்க வீரதுங்க செய்ய வேண்டியது, நீதிமன்ற உத்தரவை திரும்ப பெறுமாறு சட்டத்தரணியின் ஊடாக கோரிக்கை விடுப்பதல்ல எனவும் அவர் பொலிஸ் அல்லது நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

மிக் விமான கொள்வனவு தொடர்பான கொடுக்கல்- வாங்கலில் நடந்த பல கோடி ரூபா ஊழலில் உதயங்க வீரதுங்கவுக்கு தொடர்பிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவும் இந்த ஊழலில் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

உதயங்க வீரதுங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், மிக் விமானக் கொள்வனவு ஊழல் குறித்து தகவல்களை பத்திரிகையில் வெளியிட்டதன் காரணமாகவே சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நல்லாட்சிக்குள் சு.கவை வலுப்படுத்த நடவடிக்கை

நல்லாட்சி அரசாங்கத்தின் எஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குள் சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தும் வகையிலான யோசனை ஒன்றை முன்வைக்க கட்சியின் மூத்த அங்கத்தவர்கள் தீர்மானித்துள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கடந்து போன இரண்டு வருட காலப் பகுதிக்குள் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான சுதந்திரக் கட்சிக்கு சார்பாக எந்தவொரு செயற்றிட்டமும் முன்னெடுக்கப்படவில்லை என்று கட்சியின் மூத்த அமைச்சர்கள் அதிருப்தியுற்றுள்ளனர்.

எனவே அரசாங்கத்தின் எஞ்சியுள்ள பதவிக் காலத்தில் கட்சியை வலுப்படுத்தக் கூடிய வகையில் சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் யோசனையொன்றை முன்வைக்கத் தீர்மானித்துள்ளனர். தற்போதைக்கு வரைபாகத்தயாரிக்கப்பட்டுள்ள குறித்த யோசனைகள் இம்மாத இறுதிக்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது.

தமது யோசனைகள் குறித்து ஜனாதிபதி அல்லது அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்கள் உரிய கவனம் செலுத்தத் தவறும் பட்சத்தில் கடும் எதிர் நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவும் சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பி.எஸ்.ஜி அணிக்காக ஆரம்ப போட்டியிலேயே அசத்திய நெய்மர்



பரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியின் சொந்த மைதானத்தில் தனது முதல் போட்டியில் நெய்மர் அசத்தலாக விளையாடி இரண்டு கோல்கள் அடித்ததுடன், இரண்டு கோல்கள் அடிக்க உதவி புரிந்தார்.

பிரேசில் நாட்டின் தலைசிறந்த கால்பந்து வீரரான நெய்மர் ஸ்பெயின் நாட்டின் முன்னணி கழக அணியான பார்சிலோனாவிற்காக விளையாடி வந்தார். இந்த பருவத்தில் அவர் பிரான்ஸ் நாட்டின் பரிஸ் செயின்ட் - ஜெர்மைன் அணிக்குச் செல்ல விரும்பினார்.

நீண்ட இழுபறிக்குப் பின் பார்சிலோனா அணி நெய்மர் வெளியேறுவதற்கு ஒப்புக் கொண்டது. நெய்மருக்காக பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன் அணி பார்சிலோனாவிற்கு சுமார் 1600 கோடி ரூபாயை (220 மில்லியன் யூரோ) ஒரே தவணையாக வழங்கியது.

தற்போது பிரான்ஸ் நாட்டில் நடைபெறும் லீக் 1 கால்பந்து தொடர் தொடங்கியுள்ளது. நேற்று பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி தனது சொந்த மைதானத்தில் துலூஸ் எஃப்சி அணியை எதிர்கொண்டது. பி.எஸ்.ஜியின் சொந்த மைதானத்தில் நெய்மருக்கு இது முதல் போட்டியாகும். முதல் போட்டியில் நெய்மர் சிறப்பாக விளையாடுவர் என்று ரசிகர்கள் எதிர்பார்த்தனர். அந்த எதிர்பார்ப்பை நெய்மர் வீணாக்கவில்லை.

ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் துலூஸ் அணியின் கிராடெல் முதல் கோலை அடித்தார். தொடக்கம் முதல் நெய்மர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால் அடிக்கடி எதிரணி கோல் கம்பத்தை நோக்கி பந்தை அடித்துக் கொண்டே இருந்தார். ஆனால் அந்த பந்துகள் கோலாக மாறவில்லை.

இறுதியில் 26ஆவது நிமிடத்தில் தனது முதல் கோலை பதிவு செய்தார். ஆட்டத்தின் 35ஆவது நிமிடத்தில் நெய்மர் கொடுத்த பாஸை அட்ரியன் ராபியட் கோலாக மாற்றினார். இதனால் முதல் பாதி நேர ஆட்டத்தில் பி.எஸ்.ஜி. 2-1 என முன்னிலையில் இருந்தது.

69ஆவது நிமிடத்தில் பி.எஸ்.ஜி. வீரர் வெராட்டி 2ஆவது முறையாக மஞ்சள் அட்டை பெற்றதால் மைதானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். இதனால் பி.எஸ்.ஜி. 10 வீரர்களுடன் விளையாடியது. இருந்தாலும் தங்களது ஆட்டத்தின் வேகத்தை கைவிடவில்லை.

75ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பு கிடைத்தது. இதை பயன்படுத்தி கவானி கோல் அடித்தார். பி.எஸ்.ஜி. அணியின் தலைவர் டி சில்வா 78ஆவது நிமிடத்தில் சேம்சைட் கோல் அடிக்க துலுஸ் அணியின் கோல் எண்ணிக்கை 2ஆக உயர்ந்தது.

82ஆவது நிமிடத்தில் டி மரியா கொடுத்த பாஸை சேவியர் பேஸ்டோர் கோலாக மாற்றினார். 84ஆவது நிமிடத்தில் நெய்மர் கொடுத்த பாஸை லெய்வின் குர்ஸாவா கோலாக மாற்றினார். 92ஆவது நிமிடத்தில் நெய்மர் மேலும் ஒரு கோல் அடிக்க, பி.எஸ்.ஜி. அணி 6-2 என வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இதுவரை விளையாடியுள்ள மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது பி.எஸ்.ஜி.

நெய்மர் தனது அணியின் சொந்த மைதானத்தில் முதல் போட்டியிலேயே நான்கு கோலுக்கு வழிவகுத்து முத்திரை பதித்துள்ளார்.

## இலங்கையின் தொடர் தோல்வியின் எதிரொலி

# ஆத்திரத்தில் ரசிகர்கள் செய்த செயல்



இந்தியாவுக்கு எதிராக இலங்கை தோல்வியடைந்த நிலையில் அணி வீரர்கள் பயணிக்கும் பேருந்து முன்னால் நின்று ரசிகர்கள் கோஷம் போட்டது பரபரப்பை ஏற்படுத்தியது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொணடுள்ள இந்திய அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை முழுவதுமாக கைப்பற்றி சாதனை படைத்தது.

இதையடுத்து 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியா 9 விக்கெட்டுக்களால் இலங்கையை வீழ்த்தியது.

தொடர்ந்து இலங்கை அணி தோல்வியடைந்து வருவது ரசிகர்களை கடும் அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது.

இதன் காரணமாக போட்டி முடிந்ததும் மைதானத்தின் வாயிலில் நின்று கொண்டிருந்த இலங்கை அணியினர் பயணிக்கும் பேருந்தை ரசிகர்கள் 50 பேர் முற்றுகையிட்டனர்.


அங்கு, எங்கள் கிரிக்கெட் அணி எங்களுக்கு மீண்டும் வேண்டும், கிரிக்கெட்டில் அரசியல் வேண்டாம் போன்ற கோஷங்களை ரசிகர்கள் சத்தமாக எழுப்பினார்கள்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் ரசிகர்கூட்டத்தை கலைத்தனர்.

பின்னர் அரை மணிநேரம் தாமதமாக இலங்கை வீரர்கள் அங்கிருந்து புறப்பட்டனா.

## சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்

# பெண்கள் ஒற்றையர் பிரிவில் கார்பைன் முகுருஷா ஆண்கள் ஒற்றையர் பிரிவில் டிமித்ரோ சம்பியன்



சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பல்கேரியாவின் டிமித்ரோ சம்பியனானதுடன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் கார்பைன் முகுருஷா சம்பியனானார்.

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் கடந்த 11ஆம் திகதி தொடங்கியது. இதன் இறுதிப்போட்டிகள் நேற்று நடைபெற்றன.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் 7ஆம் நிலை வீரரான பல்கேரியாவின் கிரிகார் டிமித்ரோவும் 23ஆவது இடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியாவின் நிக் கிரைகோசும் மோதினர்.

இப்போட்டியில் டிமித்ரோ 6-3, 7-5 என்ற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். இந்த போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற டிமித்ரோவிற்கு 9.54 லட்சம் அமெரிக்க டொலர் பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இரண்டாம்நிலை வீராங்கனையான ரோமானியாவின் சிமோனா ஹலப்பும் 4ஆம்நிலை வீராங்கனையான ஸ்பெயினின் முகுருஷாவும் பலப்பரீட்சை செய்தனர்.

இப்போட்டியில் 6-1, 6-0 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்ற முகுருஷா சம்பியன் பட்டம் வென்றார்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற ஹலப்பிற்கு 5.22 லட்சம் அமெரிக்க டொலர் பரிசுத் தொகை வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற் பயிற்சி கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மூன்று மாத காலம் கொண்ட நீர்க்குழாய் பொருத்துநர் கற்கைநெறி முற்றிலும் இலவசமாக 28.08.2017 இல் ஆரம்பிக்கவுள்ளது.

இக்கற்கைநெறி தேசிய தொழில் தகைமை(NVQ) சான்றிதழுக்கான பயிற்சியாகும். இக்கற்கை நெறியினை கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுக்ளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது வலந்தலைச் சந்தியில் உள்ள காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 25.08.2017 ஆம்திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் குநிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ)

## தெய்வீக இசையரங்கில் 'ஸ்ரீராமபட்டாபிஷேகம்'

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவ மகா சபை 30 வருடங்களுக்கு மேலாக நடத்திவரும் கம்பராமாயணம் தொடர்பான தெய்வீகத் தொடர் இசைப்பேருரை சங்கீத கதாப்பிரசங்கம் இன்று மாலை 6. 30 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் இடம்பெறும். இதில் "ஸ்ரீராமபட்டாபிஷேகம்" எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதமவாரிசுகானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா இசைப்பேருரை வழங்குவார். (இ-3)

## 'சந்நிதி முருகன் அருளிய மதியும் நிதியும்' சொற்பொழிவு

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலையின் அனுசரணையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 7 மணிவரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் இடம்பெறும்.

இதில் செல்வச்சந்நிதி ஆலய அறநெறி மாணவர்களின் பஜன் , கலாகீர்த்தி உடுவைதில்லை நடராஜாவின் "சந்நிதி முருகன் அருளிய மதியும் நிதியும்" எனும் தலைப்பிலான சொற்பொழிவு, பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சைவப்புலவர் பொன்.சுகந்தனின் "ஆறு" எனும் தலைப்பிலான பிரசங்கம் என்பன இடம்பெறும். (இ-3)


# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



(179)

அமரர்

பழனிநாதன் பிரபாகரன் (பிரபா)

பணியாளர் பிரதேசசபை புதுக்குடியிருப்பு.

பண்டாரவன்னியன் சிலையடி

கற்சிலைமடு

ஒட்டுசுட்டான்.

பிறப்பு 01.11.1983

இறப்பு 27.07.2017

தொடர்புக்கு: வேதவனம்:- 077 678 7338,

மகாலிங்கம்:- 077 005 9683




கடந்த 27.07.2017 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவன், குலவிளக்கு அமரர் பழனிநாதன்- பிரபாகரன் அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து ஓடோடிவந்து உதவிகள் புரிந்து இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்களையும் அஞ்சலிப்பதாகைகளையும் அச்சிட்டு வெளியிட்டு தமது அனுதாபத்தை தெரிவித்தவர்களுக்கும் அமரர் சுகவீனமடைந்து இருந்த போது வேண்டிய உதவிகளை வழங்கி இறுதிவரை பாடுபட்ட ஒட்டுசுட்டான் வைத்தியசாலை, முல்லை மாஞ்சோலை வைத்தியசாலை, வவுனியா போதனா வைத்தியசாலை, அநுராதபுரம் போதனா வைத்தியசாலை சமூகத்தினருக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் விசேடமாக எமக்கு தொடர்ந்து உதவிகள் புரிந்து கொண்டிருக்கும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பணியாளர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் தொடர்ச்சியாக உணவு, சிற்றுண்டி, தேநீர் வழங்கிய உறவுகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் சிவபதப் பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் 23.08.2017 (நாளை) புதன்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் 25.08.2017 வெள்ளிக்கிழமை கற்சிலைமடு பண்டாரவன்னியன் சிலைக்கு அருகாமையில் உள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம்.

தகவல்:- மனைவி- பி.கஜேந்தினி (குயிலா), தாய்:- ப.தங்கம்மா (சுழிபுரம் மேற்கு) மூத்த மைத்துணர்- மகாலிங்கம் (வவுனியா), மாமன்:- சி.வேதவனம் (பாலு, பொது முகாமையாளர், முல்லை. மாவட்ட ப.தெ.வ.அ.சங்கம், சமாசம் புதுக்குடியிருப்பு.)

# 4 ஆம் ஆண்டின் நீங்காத நினைவு



அமரர். கணபதிப்பிள்ளை நடராசா

(இளைப்பாறிய இ.போ.ச. பரிசோதகர்)

மலர்வு:- 19.02.1939 உதிர்வு:- 06.09.2013

திதி:- துதியை 22.08.2017

ஆண்டு நான்கு கடந்ததையா கண்ணின் மணியாய்க் காத்தவரே
பண்பில் சிறந்த பொக்கிசமே என்றும் உங்கள் நினைவே எங்களுக்கு

இல. 503, இராமநாதபுரம், கிளிநொச்சி.

பாசமுடன் குடும்பத்தினர்.


# இராசி பலன்

22.08.2017

(ஆவணி 06, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

பிரதமை முன்னிரவு 11.45 மணிவரை

மகம் பிற்பகல் 4.42 மணிவரை

சுபநேரம் 10.35-12.05 மணிவரை

இராகுகாலம் 3.05-4.35 மணிவரை

நல்லைக்கந்தன் பூங்காவனம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தராடம், திருவோணம் | | செவ், சுக்<br>ராகு, புத |
| கேது | | | சூரி,<br>சந் |
| | சனி | | குரு |

**மேடம்** சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், வழிபாடு ஆனந்தம் தரும்.

**இடபம்** வாகன யோகத்தால் வளம் காணும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், சகோதர ஒத்துழைப்பால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்** குடும்பத்தில் சுமைகளும், பொறுப்புகளும் கூடும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**துலாம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், உறவினர்கள் உதவி இல்லம் தேடி வரலாம்.

**தனுசு** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதியைக் கொடுக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**கும்பம்** புதிய தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** நிர்வாகத் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெண்காடு சித்தி விநாயகர் வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10.35 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 03.09.2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழா, 04.09.2017 திங்கட் கிழமை முற்பகல் 10.35 மணிக்கு தேர்த்திருவிழா, 05.9.2017 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திரு விழா என்பனவும் இடம் பெறவுள்ளன. (இ-3)

# தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நியாயமான அணுகுமுறைகள் தேவை

## டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகள் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும், அக்கைதிகள் விடுவிக்கப்படுவது துரிதகதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடாகும் என்றும் நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம் என்று தெரிவித்துள்ள யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, இக் கைதிகள் விடுதலை செய்யப்படும் வரையில் அவர்கள் நியாயமான முறையில் நடத்தப்படுவதை இந்த அரசு உறுதி செய்ய வேண்டும் என அரசை வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கும் காணாமற் போனவர்களைக் கண்டறிவதற்கும் பாடுபடுகின்றோம் என இந்த அரசுடன் இணக்க அரசியல் நடத்துகின்ற தமிழ்த் தரப்பினர் ஊடகங்களின் முன்பாக காட்சியாகிக் கொண்டே தொடர் நாடகங்களை சில காலமாக அரங்கேற்றி வந்து, அவை தமிழ் மக்கள் முன்பாக எடுபட்டுப் போகாத நிலையில் தற்போது அடங்கி விட்டனர்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பையும் முன் வைத்தே எமது மக்களிடம் வாக்குகள் பெற்று, இன்று இந்த அரசில் பதவிகளையும் தனிப்பட்ட சலுகைகளையும் அனுபவித்து வருகின்ற மேற்படித் தரப்பினருக்கு தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டிய பொறுப்பும் சுமத்தப்பட்டிருப்பதை அவர்கள் புறக்கணித்து விட்டார்கள். எமது மக்களது பிரச்சினைகள் என வருகின்ற போது, இயலாமை மற்றும் முயலாமைக்குள் அடங்கி விடுவதே அவர்களது வழக்கமான அரசியலாகியுள்ளது என்பதை இப்போது எமது மக்கள் நன்குணர்ந்து வருகிறார்கள்.

இந்நிலையில், தமிழ் அரசியல் கைதிகள் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தே நாம் இந்த விடயம் குறித்து அரசுக்கு தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

தற்போது அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

வவுனியா நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்ற இக் கைதிகள் தொடர்பிலான வழக்குகள் முடிவுக்கு வரவுள்ள தருவாயில், அவ் வழக்குகளை வேறொரு நீதிமன்றத்திற்கு மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே மேற்படி உண்ணாவிரத செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மேற்படி தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படும் வரையில் அவர்கள் நியாயமான வகையில் நடத்தப்பட வேண்டும் என நாம் ஏற்கனவே வலியுறுத்தியிருந்த நிலையில், தற்போது ஏற்பட்டிருக்கும் இந்த குழப்ப நிலை தொடர்பில் அரசு உடனடி அவதானங்களைச் செலுத்தி, இக் கைதிகளுக்கு உரிய நியாயம் வழங்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா மீண்டும் அரசை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# பாதிக்கப்பட்டோருக்கான அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை (SLTES) -III இற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த தொழில் சார் பாடங்களுக்கு விண்ணப்பித்து முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு கல்வியியலில் முதல் பட்டம் இல்லை எனக் காரணம் கூறப்பட்டு இரண்டாவது நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாது பாதிக்கப்பட்டவர்களின் வழக்குத் தாக்கல் தொடர்பான கலந்துரையாடல் இன்று 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக உள்ள "எடிசன் அக்கடமி" இல் நடைபெறும். இக் கலந்துரையாடலில் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கலந்து கொள்வார்.

பாதிக்கப்பட்ட அனைவரும் கலந்து கொண்டு இலங்கை ஆசிரியர் சங்கத்தினூடாக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்ய ஒத்துழைக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (இ-3)

# திசைமுகப்படுத்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கலைமாணி- பகுதி I - 2014 (வெளிவாரி) பழைய பாடத்திட்ட பட்டக் கற்கை நெறிக்கான பரீட்சைகள் ஒக்டோபர் மாத ஆரம்பத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி திசைமுகப்படுத்தல் நிகழ்வு எதிர்வரும் 26.8.2017 (சனிக்கிழமை) முதல் 17.9.2017 (ஞாயிற்றுக்கிழமை) வரை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான நேர அட்டவணையினை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய இணையத்திலும் (www. codl.jfn.ac.lk ) முகப்புத்தகத்திலும் (www. facebook. com/ uoj.codl) பார்வையிடலாம் என பணிப்பாளர் பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ




# டெங்கு நுளம்பு பெருக ஏற்ற சூழல்



யாழ்ப்பாணம் குருசோசா வீதியிலுள்ள வடிகான் பல வருடங்களாக புனரமைக்கப் படாதுகாணப்படுவதால் வடிகாலுக்குள் கழிவுநீர் உட்புகுந்து டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு மழை காலம் ஆரம்பமாவதற்கு முன் இவ் வடிகானை புனரமைத்து தரும்படி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-107)

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாணம்,கைதடி காரைநகர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பகுதி நேர ஆங்கிலக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இக் கற்கை நெறிகளுக்கு தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இக் கற்கை நெறியினை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது வலந்தலைச் சந்தியில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அல்லது கண்டி வீதியில் உள்ள கைதடி தொழிற் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 28.08.2017 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ

# ஆன்மீகப் பிரசாரகர் பயிற்சி; சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஆனைப்பந்தியில் உள்ள குருகுலத்தில் கடந்த ஆண்டு பிற்பகுதியில் இருந்து இந்த ஆண்டு நடுப்பகுதி வரை முன்னெடுக்கப்பட்ட ஆன்மீகப் பிரசாரகர் பயிற்சி நெறியில் 40 பேர் வரையில் பங்கேற்றிருந்தனர். அதில் இறுதிப் பரீட்சையில் (எழுத்து மற்றும் செயன்முறை) 18 பேர் தேர்ச்சியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை (நல்லூர் பூங்காவனம்) மாலை 6.30 மணிக்கு நல்லூர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும். சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் இவர்களுக்கான சான்றிதழ்களை வழங்குவார். (இ-3)

# விநாயகர் சதுர்த்தி விசேட தீர்த்தவாரி

இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலய விநாயகர் சதுர்த்தி விசேட தீர்த்தவாரி எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது. காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை தீர்த்தவாரி ( நீர் ஊற்றுதல்) இடம் பெறவுள்ளது. மாலை 6 மணிக்கு வசந்த மண்டப பூஜை இடம் பெற்று சுவாமி வீதியுலா வருதல் இடம் பெறும். (இ-3)



பாஷையூர் கவிஞர் இன் சுவைக் கவிமணி பெஞ்சமின் கிறிஸ்தோப்பரின் ஞான சௌந்தரி நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டு விழா பாஷையூர் பங்கு மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற போது..

(படங்கள்- பாஷையூர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



புங்குடுதீவில் இருந்து ஊர்காவற்றுறைக்குச் சென்று என் மகளைக் காணவில்லை என்று பொலிஸில் முறையிட்ட தாய்க்கு கிடைத்த செய்தி வெந்த புண்ணில் வேல்பாய்ச்சியதாய் இருந்தது.

எதுவும் செய்ய முடியாத நிலையில் பொலிஸ் நிலையத்தில் இருந்து வித்தியாவின் குடும்பம் வீடு திரும்புகிறது.

அந்த இரவுப்பொழுதில் வித்தியாவின் உறவுகள் ஏங்கியபடி விடியலுக்காகக் காத்திருக்கின்றன.



## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

காலை 7.30 மணிக்கு பாடசாலைக்குச் சென்ற பிள்ளை வீடு வரவில்லை என்ற ஏக்கம் அந்த நடுநிசியில் நெஞ்சை இறுக்கிக்கொள்கிறது.

விடிவதற்கு இவ்வளவு நேரமாகிறதே என்ற படபடப்பு.

விடிந்ததும் அண்ணன் நிசாந்தன் அவசர அவசரமாக களத்தில் இறங்குகிறான். உறவுகளும் நாலாபக்கமும் தேடுதல் நடத்துகின்றனர்.

தன்வீட்டு எஜமானி வித்தியாவைக் காணவில்லை என்ற சோகத்தை சிவலோகநாதனின் வளர்ப்பு நாயும் உணர்ந்து கொண்டது.

தானும் தேடவேண்டும் என்ற வேட்கையில் நிசாந்தனுடனும் உறவுகளுடனும் இணைந்து கொள்கிறது.

ஆலடிச் சந்தியில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் அரளி மரங்களின் ஆக்கிரமிப்புப் பற்றையை நோக்கி நாயின் குரைப்பு. வழமையைவிட வித்தியாசமான குரைப்பில், நிசாந்தனும் உறவுகளும் அந்தத்திசை நோக்கி திரும்புகின்றனர். சிறுதூரம் சென்றதும் அந்தக் கோரக்காட்சி தெரிகிறது. அண்ணன் நிசாந்தன் மூர்ச்சையுற்றுக் கீழே விழுகிறான். என்னே! கொடுமை. கால் இரண்டும் இருவேறு மரங்களில் கட்டப்பட்ட கொடுமை; மனித இச்சையின் மிருகத்தனம் வித்தியாவின் உடலைப் பதம் பார்த்திருந்தது. மாணவி வித்தியாவின் உயிரற்ற உடல் பற்றைக்குள் கிடக்கிறது என்ற செய்தி புங்குடுதீவு எங்கணும் பரவிக்கொள்ள, வித்தியாவின் உடலருகே பெரியதொரு சனக்கூட்டம்.

இரண்டு பேரின் உதவி கிடைத்திருந்தால் வித்தியா காப்பாற்றப்பட்டிருப்பாள் என்பது உண்மையாயினும் இப்போதுதான் ஏகப்பட்ட சனங்கள் கூடிக்கொள்கின்றனர்.

ஈனர்களின் கைகளில் சிக்கி காப்பாற்றுவாரின்றி கொலையுண்டு போன வித்தியாவின் சடலமருகே நின்றவர்களின் தொலைபேசிகள் தகவல்களைப் பரிமாறிக்கொண்டன.

ஊடகவியலாளர்களின் காதுகளிலும் செய்தி எட்ட கணப்பொழுதில் அவர்கள் புங்குடுதீவைச் சூழ்ந்து கொண்டனர்.

வித்தியா சடலமாக... ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் அனுப்பப்படுகிறது.

நேற்று (13.05.2015) பாடசாலைக்கு வராத வித்தியா இன்று சடலமாக பற்றைக்குள் கிடக்கின்ற செய்தியை அவள் கற்கும் பாடசாலை அறிந்தபோது ஜீரணிக்கவே முடியவில்லை.

மாணவர்கள் அதிர்ந்து போகின்றனர். ஆசிரியர்கள் ஒன்றுகூடி ஏன்? எதற்காக? என்று கேள்விக்கு மேல் கேள்வி எழுப்பிக் கொள்கின்றனர்.

முற்பகல் 11 மணியளவில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து சேருகின்றனர்.

மாணவி வித்தியாவைக் காணவில்லை என்று நேற்று இரவு முறையீடு செய்யப்பட்ட போதும் மறுநாள் முற்பகல் 11 மணிக்கே (14.05.2015) ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் புங்குடுதீவுக்கு வர முடிந்தது. அவ்வளவு வேலைப்பளுவாம் அவர்களுக்கு.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விளக்கம், விசாரணை என்பவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்கின்றனர்.

ஊர்காவற்றுறை நீதிபதி எஸ்.லெனின்குமார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலைமையை நேரில் அவதானித்தார்.

உடற்பரிசோதனைக்காக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்குமாறு அவர் உத்தரவு பிறப்பிக்க, வித்தியாவின் உடல் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

இதனிடையே நண்பகல் 12 மணியளவில் புங்குடுதீவில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் ஆர்ப்பாட்டத்தில் குதிக்கின்றனர்.

வித்தியாவுக்கு இந்தக் கொடுமையை இழைத்தது யார்? அந்தக் கொடுமைக்காரர்களை உடன் கைது செய் என்ற கோஷங்கள் வானைப் பிளக்கின்றன.

புங்குடுதீவு எங்கணும் சோகமயம்; அதிர்ச்சி. வித்தியாவுக்கு இக்கதியை ஏற்படுத்தியது யாராக இருக்கும். புங்குடுதீவில் மக்கள் தங்களுக்குள் பலவாறாகக் கதைத்துக் கொள்கின்றனர்.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வரட்சி நிவாரணம் பெறுவதற்கு 5 நாட்கள் சிரமதானம் செய்ய வேண்டும்

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

(குருமன்காடு)

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கியுள்ளது. அதனை பெறுவதற்கு ஐந்து நாட்களுக்கு சிரமதானம் செய்ய வேண்டும் என கிராம அலுவலர்கள் வற்புறுத்துவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களும் வெகுவாக பாதிப்படைந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் தமது நாளாந்த சீவியத்தை கொண்டு நடத்த கடுமையாக போராடி வருகின்றனர். இந் நிலையில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வரட்சி நிவாரணத்தைப் பெறுவதற்கு நாள் ஒன்றுக்கு மூன்று மணி நேரம் வீதம் 5 நாட்களுக்கு வேலை செய்தால் மட்டுமே நிவாரணம் வழங்கப்படும் என கிராம அலுவலர் ஊடாக மக்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு கலந்து கொள்ளாதவர்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் நாளாந்த கூலி வேலை செய்வோர், தனி யார் துறைகளில் வேலை செய்வோர் எனப் பலரும் கடுமையாக பாதிப்படைந்துள்ளனர். மன்னராட்சிக் காலத்தைப் போன்று நிவாரணத்திற்காக மக்களை அரச அதிகாரிகள் வேலை வாங்குவது குறித்து மக்கள் பலரும் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இந்த நிலை காணப்படுகின்றது என சுட்டிக்கா ட்டப்படுகின்றது. (2-250)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இன்று வயல் விழா

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் வயல் விழா நடத்தத் தீர்மானி க்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புத சந்திரன் தெரிவித்துள்ளார். வயல் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் சேதன முறையிலான செய்கை, வீட்டுத் தோட்டம், அதி செறிவானமாமரச் செய்கை, பத்திரக்லவையுடன் பப்பாசி, வீதிமுறை பயிர்ச்செய்கை, நாற்று மேடை பரிபாலனம், ஏற்றுமதிப்பயிர்கள், வரட்சியான காலத்தில் விதைப் பரிகரணம், நீர்ப்பாசன முறைகள், பத்திரக்கலவையிடல் முறைகள், மழைக் கூடாரத்தில் பயிர்ச்செய்கை, வலை வீட்டினுள் பயிர்ச்செய்கை, காளான் வளர்ப்பு, தேனீவளர்ப்பு, முயல் வளர்ப்பு, தாராவளர்ப்பு, பண்ணை இயந்திரங்களின் அலகு, விதையிடும் கருவிகளின் செய்முறை காட்டுதல், வரம்பு கட்டும் கருவிகளின் செயன்முறை காட்டுதல், உமிக்கரி மற்றும் உயிர்க்கரி தயாரிப்பும் பாவனையும், நிலக் கடலை பிரித்தெடுக்கும் இயந்திரம், பயிர்ச்சிகிச்சை முகாம் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன என அவர் அறிவித்துள்ளார். (2)

# மடிக்கணனிகள் வழங்கல்





திருமதி. சாளினி விக்கிரமசிங்கவின நிதியொதுக்கீட்டில் மல்லாவி மத்திய கல்லூரியில் கல்வி பயின்று 2016 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மருத்துவ, பொறியியல் மற்றும் கணக்கியல் மாணவர்கள் ஒன்பது பேருக்கு மடிக்கணனிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார் . இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், வலயக்கல்வி ஆரம்ப நிலை உதவி கல்விப் பணிப்பாளர், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் , பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர். (2-281)

# மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மின்சாரப்பட்டியல் கிடைப்பதால் பெரும் தொகை பணத்தை செலுத்துவதில் அவதியுறுகின்றோம்

## மக்கள் விசனம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் சில கிராமங்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மின்சாரக் கட்டணப் பட்டியல்கள் கிடைப்பதாகவும் இதனால், தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆண்டான் குளம், ஆட்காட்டிக்குளம் உள்ளிட்ட சில கிரா மங்களில், மின் வாசிப்பாளர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையே வருகை தருவதாக மக்கள் தெரிவித்தனர்.

இதனால், தமக்கு பெருந்தொகை பணத்தை ஒரே தடவையில் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கடந்த காலங்களில், ஒவ்வொரு மாதமும் தமக்கு மின்சாரக் கட்டணப் பட்டியல்கள் கிடைப்பாகவும் தற்போது, 3 மாதத்துக்கு ஒரு தடவை மின் கட்டணப் பட்டியல் வழங்கப்படுவதாகவும், இதனால் அதிகூடிய கட்டண பட்டியல் தமக்கு கிடைப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக குறித்த கிராம ங்களில், கடந்த 16-05-2017 அன்று, மின் கட்டண பட்டியல் வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, 14-8-2017 அன்று ஒரு மின் கட்டண பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிடையில், 27-07-2017 அன்று ஒரு மின் கட் டண பட்டி யல் தொடர்பில், மின்மானி வாசிப்பு மேற்கொண்டது போல், கடைசியாக 3 மாதங்களின் பின் வழங்கப்பட்டபட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீடுகளுக்குச் சென்று மின்மானி பார்க்காது, மின் கட்டண பட்டியல் கணக் கிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ள னர்.

இதனால் அதிகூடிய தொகை தமக்கு மின்சாரக் கட்டணமாக வந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, ஒவ்வொரு மாதமும், தமக்கான மின்சாரக் கட்டண பட்டியல் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக வீடுகளுக்குச் சென்று மின்வாசிப்பை மேற்கொள்ளாது, அலுவலகத்தில் இருந்து சராசரி கணிப்பீட்டின் ஊடாக பட்டியல் போடுவதினூடாகவே, குறித்த பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும், அந்தச் செயற்பாட்டை நிறுத்தி, நேரடியாக வந்து ஒவ்வொரு மாதமும் மின் கட்டண பட்டியலை வழங்க, மன்னார் மின்சார சபை அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண் டும் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)




# புலமைசார் குறைபாடு உடையோருக்கான நலன்புரிச்சங்கத்தால் நடத்தப்பட்ட செயலமர்வு



(சிவநகர்)

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் வைத்து கொழும்பு கல்கிஸையிலுள்ள புலமைசார் குறைபாடு உடையோருக்கான நலன்புரிச்சங்கம் ஒரு நாள் செயலமர்வு ஒன்றை நேற்று திங்கட் கிழமை நடத்தியது.

சென்ற மாதம் வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் கைதடி அரச முதியோர் இல்ல கேட்போர்கூடத்தில் இதுபோன்ற செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இச் செயலமர்வு நடத்தப்பட்டது.

இதில் வளவாளர்களாக உளநல மருத்துவர்களான வே. ஜெகரூபன், ஜனக ரட்ணசிறி, திருமதி. நித்தியா, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் இயன் மருத்துவர் வே.வரதிதாசன், மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே. தபேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இச் செயலமர்வில் மனநலம் குன்றியோரை அடையாளம் காணுதலும் ஆரம்ப தலையீட்டின் முக்கியத்துவமும் மனக் கோளாறுகளை அடையாளம் காணுதலுடன் விசேட கல்விக்கான முக்கியத்துவமும் மாற்றமும் நடைமுறையிலுள்ள அரச உதவி வளங்களை அடையாளம் காணுதல், மனநலம் குன்றியோர்களை பராமரித்தலில் உள்ள சவால்கள், தொழில் சிகிச்சையின் புறச்சரீர சிகிச்சையின் முக்கியத்துவம் ஆகிய விடயங்கள் தொடர்பாக அனுபவம், திறமை வாய்ந்த விரிவுரையாளர்களால் விரிவுரை ஆற்றப்பட்டது.

கிளிநொச்சி சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் விசேட கல்வி பிரிவிலுள்ள இத்தகைய மாணவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் இந்த செயலமர்வில் கலந்து கொண்டிருந்தனர்.

புலமைசார் குறைபாடு உடையோருக்கான நலன்புரிச்சங்கம் இதுபோன்ற நிகழ்வுகளை மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை போன்ற இடங்களில் அடுத்த மாதமளவில் நடத்தவுள்ளதாக அதன் தேசிய இணைப்பாளர் திருமதி. நந்தினி தெரிவித்துள்ளார். (2-254)

# மாணவ தாதிய பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு கலந்துரையாடல்

(கிளிநொச்சி-1)

மாணவ தாதிய பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு-2017 தொடர்பான முக்கிய கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் (கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகம் அருகாமை) கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளதாக குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இக் கல ந்துரையாடலில் 2015, 2016 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞான பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந் துள்ள மாணவர்களை கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

(2-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாண்டிக்குளம் புகையிரதக் கடவையில் பொருத்தப்பட்டுள்ள ஒளிச்சமிக்ஞையில் கோளாறு

## போக்குவரத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு போக்குவரத்து சீர்செய்யப்பட்டது




வவுனியா, தாண்டிக்குளம் புகையிரதக் கடவையில் புதிதாக பொருத்தப்பட்ட ஒளிச் சமிக்ஞை கோளாறு காரணமாக தொடர்ந்தும் ஒளி எழுப்பி இயங்கிக் கொண்டிருப்பதால் அவ்வீதி வழியாக போக்குவரத்து செய்யும் மக்கள் புகையிரதம் வருகின்றது என்ற அச்சத்தில் பயணத்தை தொடருவதில் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த ஒளிச்சமிக்ஞை நேற்று காலையில் இருந்து தன்னிச்சையாக ஒளி எழுப்பி சிவப்பு லைற் ஒளிர்ந்தபடி காணப்பட்டது.

இதனால் அப் புகையிரதக் கடவையூடாக வேலைக்குச் செல்வோர், உயர்தரப் பரீட்சைக்கு செல்லும் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும் புகையிரதம் வருகின்றது எனக் கருதி அவ்விடத்தில் தரித்து நின்றதுடன் அசௌகரியங்களுக்கும் உள்ளாகியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் அவ்விடத்திற்கு சென்று போக்குவரத்தை ஒழுங்குபடுத்தியதுடன் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோஹண புஸ்பகுமார, வவுனியா பொலிஸார் ஆகியோருக்கும் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த அரசாங்க அதிபர் மற்றும் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் நிலமையை பார்வையிட்டுள்ளதுடன், அப்பகுதியில் போக்குவரத்து பொலிஸார் நியமிக்கப்பட்டு போக்குவரத்து நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தனர். தொடர்ந்தும் ஒளிச்சமிக்ஞை இயங்கு நிலையில் இருப்பதால் புகையிரதத் திணைக்களத்தின் வடக்குக்கான பிரதான கட்டுப்பாட்டு பிரிவான அநுராதபுரம் புகையிரதத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்த அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை, இப்பகுதியிலேயே கடந்த வாரம் புகையிரத விபத்து ஒன்று ஏற்பட்டு இளைஞன் ஒருவர் மரணமடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கில் பொருத்தப்பட்டுள்ள புகையிரதக் கடவை ஒளிச் சமிக்ஞைகள் இந்தியாவில் பாவனையில் இருந்து நீக்கப்பட்டவை என வடக்கு- கிழக்கு புகையிரதக் கடவை காப்பாளர் சங்கம் அண்மையில் குற்றம் சாட்டி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

# வாழ்வாதார உதவி வழங்கல்

(முல்லைத்தீவு)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் 13ம் கட்டை குமரசாமிபுரம் விசுவமடுவைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு சுயதொழில் முயற்சிக்கான வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் உறவுகளான பிரான்ஸைச் சேர்ந்த தர்சினி உதயகுமார் தனது தாயாரின் 2ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சந்திரசேகரன் ஆகியோரின் நிதி அனுசரணையின் மூலம் கடந்த கால யுத்தத்தின் போது காயமுற்று வலது கையை முற்றாக இழந்து இடது கை பெருவிரலும் இழந்து கால்களும் காயங்களுக்கு உள்ளான நிலையில் 13ம் கட்டை குமாரசாமிபுரம் விசுவமடுவைச் சேர்ந்த முன்னாள் போராளியொருவருக்கு 70ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரமும் அதற்கான தூவல் நீர்ப் பாசனத்துக்கான குழாய்களும் வழங்கப் பட்டுள்ளன. (2)




# பட்டங்கள் தயாரித்தல் போட்டி

பூநகரி பிரதேச சிறுவர் கழகங்களைச் சேர்ந்தவர்களுக்கான பட்டங்கள் தயாரித்தல் போட்டியொன்று நடத்துவதற்கான ஏற்பாடுகளை பூநகரி பிரதேச கலாசார அதிகார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இப் போட்டிகள் இரு பிரிவுகளாக நடத்தப்படும். இதற்கமைய கீழ் பிரிவில் ஐந்து வயது தொடக்கம் 10 வயது வரையுள்ள சிறுவர்களும் மேற் பிரிவில் 11 வயது தொடக்கம் 15 வயது வரையுள்ள சிறுவர்களும் பங்கேற்க முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியாளர்கள் விரும்பிய வகையில் பட்டங்களை வீட்டில் இருந்து தாமே தயாரித்து வர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய்த் தாள்கள் அல்லது துணிகள் என்பன பட்டங்களைத் தயாரிப்பதற்கு பயன்படுத்த முடியும். இப் போட்டிகளில் பூநகரி பிரதேச செயலகப்பிரிவைச் சேர்ந்த சிறுவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போட்டியாளர்கள் தாம் தயாரித்த பட்டங்களுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூநகரி பிரதேச செயலகத்திற்கு வருகை தர வேண்டுமென பூநகரி பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் தலைவரும் பூநகரி பிரதேச செயலருமான சி.த.கிருஷ்ணேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-84)

# நன்னீர் குளங்களில் மீன்பிடி நடவடிக்கை

## தடை செய்யுமாறு கோரிக்கை

(பூநகரி)

நாட்டில் நிலவி வருகின்ற கடும் வரட்சி காரணமாக பூநகரி பிரதேசத்தில் உள்ள கிணறுகள், குளங்கள் என்பனவற்றின் நீர் மட்டம் குறைவடைந்து தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்டுள்ள நிலையில் நன்னீர் குளங்களில் மீன்பிடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இக் குளங்கள் கலக்கப்பட்டு விரைவாக வற்றிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் கால்நடைகள் குடிப்பதற்கு நீரின்றி அலைந்து திரிந்து இறக்கும் அவல நிலை ஏற்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆதலால் நன்னீர் குளங்களில் மீன்பிடி நடவடிக்கையை மழை பெய்யும் வரையிலாவது தடை செய்ய வேண்டுமென கமநல சேவை அலுவலர்களிடம் பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போர் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கமநல சேவை ஆணையாளரிடமும் கோரிக்கையொன்றையும் அவர்கள் முன்வைத்துள்ளதாக தெரிவிக்கின்றனர். (2-84)

# வரட்சி நிவாரண உதவித் திட்டத்திற்கான வேலைகள் ஆரம்பம்



கிளிநொச்சி - ஊரியான் கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட வரட்சியால் பாதிக்கப்பட்ட குழும்பங்களுக்கு வரட்சி நிவாரண உதவித்திட்டத்திற்கான வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. குறித்த உதவித்திட்டத்திற்கான வேலைகள் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இதில் ஊரியான் கிராம அலுவலர் பிரிவில் வசித்துவரும் குடும்பங்களின் குடும்பத் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது முரசுமோட்டை பொதுச்சந்தை வளாகம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதி இளஞ்செழியனுக்கு விசேட அதிரடிப்படை பாதுகாப்பு



இலங்கை நீதித்துறையில் அதிகூடிய விசேட பாதுகாப்பு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதாவது கடமை நேரத்தில் நீதிமன்றத்திலும், அவருடைய வாசஸ்தலத்திற்கும் விசேட அதிரடிப்படையினருடன் கூடிய விசேட பாதுகாப்பை அரசாங்கம் வழங்கியுள்ளது.

அண்மையில் நல்லூர் ஆலயப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தையடுத்து, நீதிபதி இளஞ்செழியனுடன் உடனடியாகத் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்தச் சம்பவம் பற்றிய விபரங்களைக் கேட்டறிந்ததுடன், அவருடைய பாதுகாப்பு தொடர்பிலான விடயங்களிலும் கூடிய கவனம் செலுத்தியிருந்தார்.

இதனையடுத்தே நீதிபதி இளஞ்செழியனுக்கு விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அவருடைய பாதுகாப்புக்காக விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த எட்டுப் பேர் அடங்கிய குழுவினர், அவர் நீதிமன்றத்தில் கடமையில் இருக்கும்போது பாதுகாப்பு வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாண்டோவின் கட்டளையின்படி யாழ். பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் அவருடைய வாசஸ்தலத்துக்குப் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-9)

# பத்தாயிரம் மெற்றிக் தொன் குப்பை நாளாந்தம் சேகரிப்பு

இலங்கையில் நாளாந்தம் பத்தாயிரம் மெற்றிக் தொன் அளவிலான குப்பை சேகரிக்கப்படுவதாக பரிசரயட யுக்திய என்ற சூழல் பாதுகாப்பு அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

கொழும்பு மாநகர எல்லைக்குள் மட்டும் தினமொன்றுக்கு 6500 மெற்றிக் தொன் எடை கொண்ட குப்பைகள் சேகரிக்கப்படுவதாகவும் இதன்போது தெரியவந்துள்ளது.

இதில் 25 வீதமான குப்பைகள் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்றவற்றைக் கொண்டிருப்பதாகவும் குறித்த சூழல் பாதுகாப்பு அமைப்பு கண்டறிந்துள்ளது.

இவ்வாறான நிலையில் குப்பைகளை வீடுகளிலேயே மறுசுழற்சி செய்வதற்கு ஊக்குவித்தல் மற்றும் கழிவுப் பொருட்களை குறைத்துக் கொள்ளல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமெனவும் பரிசரயட யுக்திய சூழல் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)

# சு.க.மாநாட்டுக்கு திறந்த அழைப்பு!



## அமைச்சர் எஸ்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 66 ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டுக்கு சுதந்திர கட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் 66 வருடாந்த மாநாடு செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி பொரளை கெம்பள் பார்க் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்பது குறித்து கட்சியின் ஆலோசகரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து இன்னும் அதிகாரபூர்வமான 'அறிவிப்புகள் வெளியாகவில்லை.

மாநாட்டில் பங்கேற்பது குறித்து, ஒன்றிணைந்த எதிரணியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தமது முடிவை அறிவிக்கவில்லை.

இந்நிலையில், மாநாட்டில் பங்கேற்குமாறு அனைவருக்கும் திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார். (இ-7)

# இன,மத அடிப்படையில் செயற்படுவதனால் அபிவிருத்திக்குத்தடை- அமைச்சர் மங்கள



இனம், மதம் என்ற அடிப்படையில் வேறுபட்டு செயற்படுவதன் மூலம் அபிவிருத்திச் செயற்பாடுகள் தடைப்படுவதாக நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். மாத்தறை வல்பொல ஸ்ரீ மங்கள பிரிவெனா விஹாராதிபதி சங்கைக்குரிய வலஸ் கல புன்னஜி மயுரவன்ச தேரரின் 100 ஆவது ஜனனதின வைபவத்தில் அமைச்சர் உரையாற்றினார். இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஜனநாயகத்தையும், நல்லிணக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் மங்கள சமரவீர அங்கு சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் பதவிக்கு

# போதுமான விண்ணப்பங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை

யாழ்.ஒஸ்மானியா கல்லூரியின் அதிபர் பதவிக்கு போதுமான விண்ணப்பங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்த வடமாகாண சபை உறுப்பினர் அ.அஸ்மின், தகைமை உடையவர்களை விரைவில் விண்ணப்பிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் தற்போதைய அதிபர் ஜனாப் எம். எஸ்.எம்.அஷ்ரப் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ள நிலையில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு அதிபர்கள் எவரேனும் விண்ணப்பித்துள்ளார்களா? என அவரிடம் கோரிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண கல்வி அமைச்சு இதற்கான விளம்பரத்தினை ஒரு மாதத்திற்கு முன்னர் பத்திரிகைகளில் பிரசுரித்திருந்தது, இருப்பினும் போதுமான விண்ணப்பங்கள் இதுவரை வந்து சேரவில்லை என கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

வடக்கு மாகாணத்தினுள் பொருத்தமான விண்ணப்பதாரி இல்லாத சமயத்தில் தேசிய ரீதியில் அதிபர் ஒருவரைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

எனவே மேல், மத்திய, வடமேல் அல்லது கிழக்கு மாகாணங்களில் இருந்து பொருத்தமான அதிபர் தரம் ஒன்றினைச் சேர்ந்த முஸ்லிம் அதிபர் ஒருவரைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிப்பதே சிறப்பானது என எம்மால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதிபர் நியமனம் கல்வி அமைச்சின் பொறுப்பில் உள்ள விடயமாகும்.அதனை நாம் முன்னெடுக்க முடி யாது. ஆனால் பொருத்தமான அதிபர்கள் இருப்பின் அவர்களை குறித்த பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஊக்கப்படுத்தலாம்.மாறாக அவர்களை நியமிக்கும் பணிகளை நாம் முன்னெடுக்க முடியாது.

அத்தோடு இதுவரையான தகவல்களின் பிரகாரம் 2017 ஒக்டோபர் மாதத்திற்குள் ஒரு புதிய அதிபரை யாழ். ஒஸ்மானியாவிற்குப் பெற்றுத்தர வடக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பிரதான கட்சிகள் அரசியல் கலாசாரத்தை அழித்து விட்டன

## ரில்வின் சில்வா புகார்



பிரதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் நாட்டின் அரசியல் கலாசாரத்தை அழித்து விட்டதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எவ்விதமான விஞ்ஞானபூர்மான முறை அமைச்சு பதவிகள் பகிரப்படாத காரணத்தினால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நிதியமைச்சின் கீழ் வரவேண்டிய துறைகள் பிரதமரின் கீழ் உள்ள அமைச்சிடம் இருக்கின்றது. பாடசாலை கல்விக்கான அமைச்சு தனியாகவும் உயர்கல்வி அமைச்சு தனியாகவும் இருக்கின்றன.

பெருந்தெருக்கள் துறைக்கு பொறுப்பான அமைச்சரிடம் உயர்கல்வி வழங்கப்பட்டுள்ளதாகவும் ரில்வின் சில்வா சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)








புன்னாலைக்கட்டுவன் தெற்கு கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா அண்மையில் கலைவாணி முன்பள்ளி முன்றலில் சனசமூக நிலையத் தலைவர் மு.தவராசா தலைமையில் இடம் பெற்றது. விளையாட்டு விழாவிற்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசன் மங்கல விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதனையும் இசையும் அசையும் நிகழ்ச்சியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-புன்னாலைக்கட்டுவான் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “எந்நிதியும் தருவான் செல்வச்சந்நிதியான்”



## மஹோற்சவம் இன்று ஆரம்பம்

“ஆரணி முனிவர் வானோர்
தேவரெலாம் துதி செய்ய
தாரணி யிலங்கு சித்தர்களும்
ஞானிகளும் தோழுதேற்றிட
சீரணி துலங்கு மெங்கள்
சந்நிதிச் செல்வனாரின்
அருளணியாற் கொடி வள்ளி
முனைத்தெழுமே”

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியானுடைய ஆலயத்தில் நடைபெற்று வருகின்ற வழிபாட்டு முறைகளும் பூசை விழாக்களும் இந்த மண்ணிற்கே உரியதான தமிழர்களுடைய புராதன பாரம் பரியங்களை எடுத்தியம்புவதாக அமைந்திருக்கின்றன. புராதன வழிபாட்டு முறைகளுள்ளேயிருந்த நம்பிக்கையினதும் பக்தியினதும் காரணமாக தெய்வீக சக்திகளிட மிருந்து அற்புதம் நிறைந்த வெளி ப்பாடுகள் அவ்வப்போது தோற்று விக்கப்பட்டன். இதனா லேயே பல ஆலயங்களினதும் அவற்றில் உறை ந்தருளும் இறைவர்களதும் அருட் திறன்கள் இற்றைவரை இந்த மண்ணின் கண் மகிமை மிகு ந்த அம்சங்களாக அமைந்துள் ளன.



அவ் வகையில்தான் செல்வச் சந்நிதியானுடைய ஆலயங்களாக நிகழப் பெற்று வரும் பூசைகள், விழாக்கள் என்பன பாரம்பரிய பெறு மானங்களைக்கொண்ட அம்சங் களாக நிகழப்பெற்று வருகின்றன. சந்நிதி ஆலயத்தின் மஹோற்சவ த்தை பொறுத்த வரையில் இங்கு கொடித்தம்பம் அமைந்திருக்கவில்லை. அதுபோல ஆகம முறைப்படியாக கொடித்தம்பம் அமைந்திருக்கவில்லை. அது போல ஆகம முறைப்படியாக கொடி யேற்றத்திற்கான மஹோற் சவகிரியைகளும் இடம்பெறுவதில்லை. ஆனாலும் வருடாந்த உற்சவத்தை வெளிப்படுத்தும் அடையாளமாக தாமாகவே முளைத்தெழும் வள்ளிக் கொடியின் தோற்றப்பாடும் அத னைத் தொடர்ந்து பூர்வபட்ச பிரதம திதி கூடும் வேளையில் கொடியே ற்றச் சடங்குகளும் நிகழப்பெறும். வைரவப் பெருமானுக்கு காப்புக் கட்டுதலுடன் பிள்ளையார் பூசை, வேலவர் பூசை என்பன நிகழப் பெற்று கொடியேற்றத்திற்கான பூசை நிகழப்பெறும்.

ஆலய வாசலில் மூலஸ்தான த்தை நோக்கியவாறு அமர்ந்துள்ள நந்திக்கு முன்பாக வைக்கப்படும் கேடகம் இக்கொடியேற்ற வைபவத் தில் பிரதான இடத்தை பெறுகின் றது. இக் கேடகத்தின் கலசத்தில் தெற்பையுடன் ஏழு மாவிலைகள் வைத்துப் பட்டுத்துண்டு கட்டி பூசை இடம்பெறும். இது கலச பூசை என்று சொல்லப்படுகின்றது. இவ்வாறு கலச பூசை நிறைவடைந்ததும் அக் கலசங்கள் கேடகத்தின் மேல் விதா னத்தில் வைக்கப்பட்டு வேற் பெரு மானுக்கு பூசைகள் ஆரம்பமாகும். இவ்வாறு நடைபெறும் பூசைகள், சடங்குகளைத் தொடர்ந்து எழுந்த ருளி வேலவருக்கும் விசேட பூசை கள் நிகழப்பெற்று அதே கேடகத்தில் வேலவர் வீதி உலா வருவார்.

அத்தருணம் ஆலயத்தின் முகப் பில் சேவற் கொடி ஏற்றப்படும் நிகழ்வு இடம்பெறும். சுவாமி உள் வீதியை சுற்றி வருகின்ற நேரத்தில் வள்ளி யம்மன் வாசலுக்கு வந்து விசேட மாக தீர்த்தக் குளத்தில் இருந்து நீரெ டுத்து நிறைகுடம் வைத்து தீவட்டி பிடித்து வள்ளியம்மனுக்கும் வேல வருக்கும் பூசைகள் இடம்பெறும்.

அப்பூசைகள் முடிந்ததும் சுவாமி வெளிவீதியுலா வந்து மீண்டும் வடக்குப்புறக் கதிர்காம வாயிலூ டாக இருப்பிடத்தை வந்து அடை வார். இவ்வாறு பழம்பெறும் பாரம் பரியங்களும் சடங்கு முறைகளும் நிறைந்ததாக எம்பெருமான் சந் நிதி வேலவருடைய கொடியேற்றச் சடங்கு அமைந்து விளங்குகின் றது. இந்நாள் தொடக்கம் சந்நிதி வேலனுடைய அடியார்கள் காவடி எடுத்தல், பாற்செம்பு எடுத் தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், முடி இறக்குதல் என்று இன்னும் பற்பல சமர்ப்பனங்களை செய்து தமது நேர்த்திகளை நிறைவேற்றுகின்ற னர். அகமும் புறமும் மெய்யடி யாரின் கோலங் கொண்ட அடிய வர்கள் அவனடியில் தங்கி இருந்து பேரின்ப பேற்றை பெறுவர். எல் லாம்வல்ல சந்நிதிவேல்பெருமானை ஒவ்வோர் உள்ளமும் மெய்யுருகி நிறைந்து தொழ திருவருள் கூடி வரும் அல்லவா. ஏனெனில் செல் வச்சந்நிதியான் அடியார்க்கருள வல்ல நித்திய அற்புதனாக விளங் குகிறான்.

“எந்நிதியும் தருவான் செல் வச் சந்நிதியான் அவனிடத்தில் பெறுமின்பம் சந்நிதி வசந்தமே”

துரை. கணேசமூர்த்தி



உலக நிகழ்ச்சி தயாரிப்பாளர்
K.T.பிரசாத் வழங்கும்
நல்லூர் முருகன் ஆலய பூங்காவன உற்சவத்தை முன்னிட்டு
(பழைய, புதிய, இடைக்காலப் பாடல்கள் அடங்கிய மாபெரும் இசை நிகழ்ச்சி)

ரஜனிமுருகன் திரைப்படப் பாடல் ஆவிபறக்கும் தீக்கடை புகழ் தென்னிந்தியப் பாடகர் V.M.மகாலிங்கம் கலந்து சிறப்பிக்கும்

“இன்னிசை கானங்கள்”
அனுமதி இலவசம்
இன்று மாலை 6 மணிக்கு
நல்லூர் சங்கிலியன் பூங்கா மைதானத்தில்!

பிரதான அனுசரணை
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

இணை அனுசரணை வழங்குவோர்
NSB National Savings Bank
Sri Lanka Telecom Mobitel
SriLankan Airlines
அபி பஷன் வேல்ட் 112, கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்.
NLB LIVE YOUR DREAMS
கிருபா லேணர்ஸ்
Lankapuri
ANDRA JAFFNA T.P : 021 222 8929
SPC
Highland
MILCO
IDM யாழ்ப்பாணம்
சிறிநதியா நகைமாடம்



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 6 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:AAT, BBM/ உதவி கணக்காளர்<br>தொ.இ: B/7640 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 41<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BSc, SLEAS/ அரசதொழில்<br>தொ.இ:G/7651 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 48 செவ் 1 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்:NCT/அரச தொழில<br>தொ.இ: B/7641 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம் செவ் 1 இல்<br>உயரம்: 5’1"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/7655 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில<br>தொ.இ: B/7642 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:BSc/ Demo<br>தொ.இ: G/7657 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 02 செவ் 12 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:CIMA, BABF/ வங்கியாளர்<br>தொ.இ: B/7644 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்:BA/அரச தொழில்<br>தொ.இ:G/7661 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. அணிகள் இணைந்தன

## தலைமை அலுவலகத்தில் நேற்று கைகோர்த்த ஓ.பி.எஸ்.–இ.பி.எஸ்

நீண்ட இழுபறிக்குப் பின்னர் ஓபிஎஸ்-இபிஎஸ் அணிகள் ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நேற்று ஒன்றிணைந்தன.

ஓ.பி.எஸ். தரப்பினர் விதித்த முக்கிய நிபந்தனை களை எடப்பாடி பழனிச்சாமி தரப்பினர் ஏற்றுக் கொண்டதையடுத்து அ.தி.மு.க. அணிகள் இணைப்பு குறித்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டது. சசிகலாவை விலக்கி வைத்து விட்டு ஆட்சி மற்றும் கட்சியை வழி நடத்துவதில் அதிகாரப்பகிர்வு செய்வதில் இரு தரப்பினருக்கும் இடையே சற்று இழுபறி ஏற்பட்டது.



எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக தொடர்வது என்று இரு தரப்பினரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். அதுபோல சசிக லாவை நீக்கிய பிறகு கட்சியை வழி நடத்த 15 பேர் கொண்ட வழிகாட்டும் குழு உருவாக்கவும், அந்த குழுவுக்கு ஓ.பன்னீர்செல்வத்தை தலைவராக தேர்வு செய்ய இரு தரப்பினரும் சம்மதித்தனர்.

இவை தவிர அமைச்சரவையை மாற்றம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இரு அணிகளிடமும் இத்தகைய ஒருமித்த கருத்து உருவானதும் நேற்று அணிகள் இணைப்பை நடத்த முடிவு செய்தனர்.

அதன்படி நேற்றுக் காலை இரு அணி தலைவர்களும் தனித்தனியே ஆலோசனை நடத்தினார்கள்.

அதன்பின் னர் பிற்பகல் 2 மணியளவில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அமைச்சர்கள் ராயப்பேட்டையில் உள்ள கட்சி தலைமை அலுவலகத் திற்கு வந்தனர். இதேபோல் ஓ.பி.எஸ். அணி நிர்வாகிகள் சிறிது நேரத்தில் தலைமை அலுவலகத்திற்கு வந்தனர்.

ஓ.பன்னீர்செல்வம் 2.40 மணியளவில் தலைமை அலுவலகம் வந்து சேர்ந்தார். அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதை யடுத்து இரு தரப்பினரும் அணிகள் இணைந்ததை முறைப்படி அறிவித்தனர். ஒரே மேடையில் ஓ.பன்னீர்செல்வம், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியுடன் கைகோர்த்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

அதேசமயம் டிடிவி தினகரன் தனது ஆதரவு எம்.எல்.ஏ.க்களுடன் தனியாக ஆலோசனை நடத்தினார். அவரது நிலைப்பாடு குறித்து பின்னர் அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (3-8)

# சிறையில் ஜீவசமாதி அடைய

# உண்ணாவிரதம் இருந்து வரும் முருகன்

# நேற்று முதல் மௌன விரதத்தை தொடங்கினார்



வேலூர் சிறையில் 4ஆவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வரும் ராஜீவ் கொலை கைதி முருகன் உடல்நிலை சோர்வடைந்தது. நேற்று காலை முதல் அவர் மௌன விரதத்தையும் தொடங்கினார்.

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை கைதி முருகன் பல்வேறு முயற்சிகள் எடுத்தும் விடுதலை கிடைக்கவில்லை.

சிறையில் வாழ்க்கை தொடர விருப்பம் இல்லை. அதனால் ஜீவசமாதி அடைய அனுமதிக்க வேண்டும் என சிறைத்துறைக்கு கடிதம் எழுதினார்.

அவர் அறிவித்தபடி கடந்த 18ஆம் திகதி தனது ஜீவ சமாதி நிலையை அடைவதற்காக உணவுகளை உட்கொள்ளாமல் விரதம் இருந்து வருகிறார்.

தொடர்ந்து நேற்று 4ஆவது நாளாக தனது உண்ணா விரதத்தை மேற்கொண்டுள்ளார். நேற்று அவரது உடல் நிலை சோர்வடைந்துள்ளது. வைத்தியர்கள் அவரது உடல்நிலையை பரிசோதித்தனர். மேலும் நேற்று முதல் மௌன விரதம் இருக்க போவதாக முருகன் நேற்று முன்தினம் தெரிவித்தார். அதன்படி நேற்றுக் காலை மௌன விரதத்தையும் தொடங்கினார்.

சிறைக்குள் கைதி உணவு உண்ணாமல் இருப்பது சிறை விதிகளை மீறும் செயலாகும். அதன்படி சிறை விதியை முருகன் மீறியதால் அவருக்கு உறவினர்களை சந்திக்கும் சலுகை ரத்து செய்யப்பட்டுள்ளது.

முருகன் 15 நாட்களுக்கு ஒரு முறை தனது மனைவியை பொலிஸ் காவலுடன் பெண்கள் சிறைக்கு சென்று சந்தித்து பேசுவார். சிறை விதிகளை முருகன் மீறிய தால் அவருக்கு உறவினர் கள், மனைவி நளினியை சந்திக்கும் சலுகை ரத்து செய்யப்பட்டுள்ளது. முருகன் தனது உறவினர்கள் மற்றும் மனைவியை 3 மாதங்கள் சந்திக்க இயலாது. தொடர்ந்து அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டால் பிற சலுகைகளும் ஒவ்வொன்றாக ரத்து செய்யப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவரது உடல்நிலை குறித்து சிறைச்சாலை வைத்தியர்கள் மற்றும் அவரது குழுவினர் அவ்வப்போது பரிசோதனை செய்து வருகின்றனர். (3-8)




# மோடிக்கு நல்ல எண்ணம் கொடுக்க வேண்டி யாகம்

## தமிழக விவசாயிகள் நூதன போராட்டம்



(டில்லி)

டில்லியில் தமிழக விவசாயிகள் நேற்று முன்தினம் ஈஸ்வரனை வேண்டி மோடிக்கு நல்ல எண்ணம் கொடு என்று யாகம் வளர்க்கும் போராட்டம் நடத்தினர்.

தமிழக விவசாயிகள் டில்லி ஜந்தர்மந்தரில் கடந்த 35 நாட்களாக தொடர் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

36ஆவது நாளான நேற்று முன்தினம் ஈஸ்வரனை வேண்டி மோடிக்கு நல்ல எண்ணம் கொடு என்று யாகம் வளர்க்கும் போராட்டம் நடந்தது. மத்தியில் ஆளும் பிரதமர் மோடிக்கு தமிழக விவசாயிகளை பற்றியும், விவசாயத்தை பற்றியும் நல்ல எண்ணம் வேண்டியும், விவசாயிகளின் கோரிக்கையான விவசாய விளை பொருட்களுக்கு இலாப கரமான விலை கொடுக்கும் வரை அனைத்து வங்கிகளும் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டியும், இந்திய நதிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் தர வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், விவசாயிகள் அனைவருக்கும் காப்பீடு வழங்க வேண்டும்,

நெடுவாசல், கதிராமங்கலம், வடகாடு, நல்லாண்டர் கொல்லை போன்ற ஊர்களில் விவசாய நிலங்களை அழித்து கொண்டிருக்கும் ஐ.ஓ.சி. நிறுவனத்தை உடனடியாக அகற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு மத்திய அரசின் மோடிக்கு நல்ல எண்ணத்தை கொடுத்து செயற்படவைக்க் வேண்டும் என்று ஈஸ்வரனை வேண்டி யாகம் செய்தனர்.

முன்னதாக தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி ஜந்தர் மந்தர் வீதியில் காலை ஊர்வலம் நடந்தது. இதில் அய்யாக்கண்ணு உட்பட தமிழக விவசாயிகள் கலந்து கொண்டனர். (3-8)

# எடப்பாடி அரசுக்கு எதிராக மு.க.ஸ்டாலின் புதிய வியூகம்



(டில்லி)

அ.தி.மு.க.வில் பிளவுபட்ட 2 அணிகளும் மீண்டும் இணையும் நிலையில் எடப்பாடி பழனிச்சாமி அரசுக்கு எதிராக தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் புதிய வியூகம் வகுத்துள்ளார்.

அ.தி.மு.க. இரண்டாக பிளவுபட்டபோது, அதனை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி தி.மு.க. ஆட்சியை பிடிக்க முயற்சிகளை மேற்கொள்ளும் என்று கூறப்பட்டது. ஆனால் அதுபோன்ற எந்த வேலைகளையும் தி.மு.க. செய்யவில்லை.

இதுபற்றி பலமுறை மு.க.ஸ்டாலின் கருத்து தெரிவித்துள்ளார். ஜனநாயக ரீதியில் மக்களை சந்தித்து ஆட்சி அமைப்பதையே தி.மு.க. விரும்புகிறது. அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை இழுத்து குறுக்கு வழியில் ஆட்சி அமைக்க விரும்பவில்லை என்று கூறியுள்ளார்.

இப்போதைய சூழ்நிலையில் எப்போது தேர்தல் நடந்தாலும் அது தி.மு.க.வுக்கு சாதகமாகவே இருக்கும் என்கிற கருத்து பரவலாகவே உள்ளது.

எனவே இதனை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தி.மு.க. முன்னணி நிர்வாகிகள், மு.க.ஸ்டாலினிடம் வலியுறுத்தி உள்ளனர். இதனை மு.க.ஸ்டாலின் ஒத்துக்கொண்டு செயற்பட தொடங்கி இருப்பதாகவே தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனை உறுதிப்படுத்தும் விதத்திலேயே நேற்று முன்தினம் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையும் உள்ளது.

இதன் மூலம் எடப்பாடி பழனிச்சாமி அரசுக்கு எதிராக ஸ்டாலின் அதிரடியான முயற்சிகளில் இறங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அ.தி.மு.க. அணிகள் பிளவால், இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்டுள்ளது. இரு அணிகளின் இணைப்பும் தீவிரமாகி வரும் நிலையில், முடக்கப்பட்ட சின்னம் மீண்டும் கிடைத்துவிட்டால் அது தி.மு.க.வுக்கு நிச்சயம் [illegible] இருக்கும் என்கிற கணிப்புகளும், மு.க.ஸ்டாலினிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எனவே தி.மு.க.வுக்கு கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவே தி.மு.க.வினர் விரும்புகிறார்கள்.

எடப்பாடி பழனசிசாமி-ஓ.பி.எஸ். அணிகள் இணைந்தாலும் தினகரன் தனி அணியாகவே செயற்பட்டு வருகிறார்.

இதனால் அ.தி.மு.க. இணைப்புக்கு பிறகு எடப்பாடி அரசுக்கு பெரும்பான்மை இருக்கிறதா? என்பதை அறியும்படி ஆளுநரை சந்தித்து மு.க.ஸ்டாலின் வற்புறுத்துவார் என்று தெரிகிறது.

அதன் பிறகு எடப்பாடி பழனிச்சாமி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வரவும் தி.மு.க. திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக ஆளுநரை சந்தித்து மனு அளிக்கவும் ஸ்டாலின் [illegible] செய்துள்ளதாக கூறப்படுகிறது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா, தென்கொரியா கூட்டுப் போர்ப் பயிற்சி

## வடகொரியா எச்சரிக்கை



கொரிய தீபகற்ப பகுதியில் அமெரிக்காவும், தென் கொரியாவும் நேற்று நடத்திய கூட்டு போர்ப்பயிற்சிக்கு வட கொரியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவுக்கும், வட கொரியாவுக்கும் இடையேயான பனிப்போர் தொடர்ந்து நீடித்து வருகிறது. தன்மீது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் புதிய பொருளாதார தடை விதிக்க காரணமான அமெரிக்காவின் குவாம் தீவின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்துவோம்என வட கொரியா அதிரடியாக அறிவித்தது.

அதற்கு பதிலடி கொடுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், "அந்த நாட்டின் மீதான பிரச்சினையில் ராணுவ தீர்வு காண்பதற்கு போர்த் தளபாடங்களையும், ஆயுதங்களையும் ஏற்றியாகி விட்டது. வடகொரியா தனது பாதையை மாற்றிக்கொள்ளாவிட்டால் தாக்குதல் நடத்தப்படும்" என எச்சரித்தார்.

இந்நிலையில், அமெரிக்காவும் தென்கொரியாவும் ஆண்டுதோறும் நடத்துகிற கூட்டு போர்ப்பயிற்சி கொரிய தீபகற்ப பகுதியில் நேற்று தொடங்கியது. இது தொடர்ந்து 10 நாட்கள் நடக்கிறது. இந்த கூட்டு போர்ப் பயிற்சி, வடகொரியாவுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது.

இது பற்றி, வடகொரிய அரசின் செய்தித்தாள் 'ரோடாங்க் சின்முன்' நேற்று முன்தினம் வெளியிட்ட செய்தியில், "வர இருக்கிற அமெரிக்க, தென் கொரிய கூட்டு ராணுவ பயிற்சி பொறுப் பற்றது. ஒரு அணு ஆயுதப் போரின் கட்டுப்பாடற்ற கட்டத்தில் நிலைமையை கொண்டு செல்கிறது" என தெரிவித்துள்ளது.

மேலும், "எங்கள் படை எந்த நேரத்திலும் அமெரிக்காவை தாக்குதல் இலக்காகக் கொள்ளும். குவாம், ஹவாய் அல்லது அமெரிக்காவின் பிரதான நிலப்பகுதியில் இரக்கமற்ற தாக்குதல் நடத்த முடியும்" என குறிப்பிடப் பட்டுள்ளது. (3-8)




## ஷேக் ஹசீனா படுகொலை முயற்சி 10 பேருக்கு மரண தண்டனை



பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, கடந்த 2000ம் ஆண்டில், அவரது சொந்த ஊரான கோபால் கஞ்ச் கிராமத்தில் நடந்த பொதுக்கூட்ட பேரணியில் பங்கேற்க சென்றார். அங்கு அவரை கொலை செய்ய, தடை செய்யப்பட்ட அமைப்பான ஹர்கதுல் ஜிகாத் இ இஸ்லாமி எனும் தீவிரவாத அமைப்பு, 76 கிலோ வெடிகுண்டை மறைத்து வைத்திருந்தது. கூட்டம் தொடங்குவதற்கு முன்பாக பாதுகாப்பு படையினர் வெடிகுண்டை கண்டுபிடித்து செயலிழக்கச் செய்தனர். இதுதொடர்பாக தீவிரவாத அமைப்பின் தலைவன் முப்தி ஹன்னன் உட்பட 25 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதில் ஹன்னன் மற்றொரு வழக்கில் தூக்கிலிடப்பட்டான். வழக்கை விசாரித்த விரைவு நீதிமன்ற நீதிபதி மம்தாஜ் பேகம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

அதில், 10 பேருக்கு மரண தண்டனையும், 9 பேருக்கு 20 ஆண்டு சிறைத்தண்டனையும், 4 பேரை வழக்கிலிருந்து விடுவித்தும் உத்தர விட்டார்.

உயர் நீதிமன்ற அனுமதியின்படி, தூக்கில் தொடங்க விடப்பட்டோ அல்லது துப்பாக்கியால் சுட்டோ மரண தண்டனை நிறைவேற்றப்படும்.

இதே போல, 2004ஆம் ஆண்டு ஷேக் ஹசீனாவை கொலை செய்ய மற்றொரு முயற்சி நடந்தது. இந்த வழக்கின் விசாரணை டாக்கா நீதிமன்றத்தில் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. இந்தாண்டு இறுதியில் தீர்ப்பு வழங்கப்படவுள்ளது.

இவ் வழக்கில் முக்கிய குற்றவாளிகளான பங்களாதேஷ் தேசிய கட்சியின் முன்னாள் தலைவர் கலீதா ஜியா, அவரது மகன் தாரிக் ரஹ்மான் இருவரும் தலை மறைவாக இருக்கின்றனர். (3-8)

# அமெரிக்க போர்க்கப்பல் சரக்கு கப்பலுடன் மோதி விபத்து 10 வீரர்கள் மாயம்



சிங்கப்பூர் க்டல் பகுதியில் சென்ற அமெரிக்க போர்க்கப்பல், சரக்கு கப்பலுடன் மோதிய விபத்தில் 10 பேர் மாயமாகினர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் ஜான் மெக் கெயின் என்ற நாசகாரி போர்க்கப்பல் சிங்கப்பூர் கடல் பகுதியில் நேற்று சென்று கொண்டிருந்தது. அது மிகவும் அதி நவீன தொழில் நுட்ப வசதி கொண்டது. இதில் அதிக சக்தி வாய்ந்த ரேடார் கருவிகள் உள்ளன.

சிங்கப்பூர் கடல் பகுதியில் மலாக்கா தீவு அருகே சென்று கொண்டிருந்த அமெரிக்க போர்க்கப்பல், லிபியாவை சேர்ந்த அல்னிக் என்ற சரக்கு கப்பலுடன் திடீரென மோதியது. இந்த விபத்தில் அமெரிக்க கப்பலில் இருந்து 10 பேர் மாயமானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் அமெரிக்க போர்க் கப்பல் கடும் சேதம் அடைந்தது. சரக்கு கப்பலில் 30 ஆயிரம் தொன் சரக்குகள் ஏற்றப்பட்டிருந்தன.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், இந்த விபத்தில் அமெரிக்க போர்க்கப்பலில் பயணம் செய்த 10 வீரர்கள் மாயமாகினர். மேலும் 5 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களை உலங்கு வானூர்தியின் மூலம் மீட்டு சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளோம். மாயமான வீரர்களை தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர். (3-8)

## ஹிரோஷிமா அணுகுண்டுக்கு உதவிய போர்க்கப்பல் கடலுக்கடியில் கண்டுபிடிப்பு

இரண்டாம் உலகப்போரில் ஜப்பானால் மூழ்கடிக்கப்பட்ட அமெரிக்க போர்க்கப்பலின் பாகங்கள் வட பசுபிக் கடலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலகச் சரித்திரத்தில் மிக அதிகமான சேதம் விளைவித்த, மிக அதிக எண்ணிக்கையில் மனித உயிர்களைப் பலி வாங்கிய ஒரு போர் என்றால், அது இரண்டாம் உலகப் போர்தான்.

இந்த உக்கிரமான போரில் அமெரிக்கா நடத்திய அணுகுண்டு தாக்குதலின் விளைவுகளை, போர் முடிந்து பல ஆண்டுகள் ஆகிய பின்னரும் ஜப்பான் சந்தித்து வருகிறது.

ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் அமெரிக்காவால் வீசப்பட்ட உலகின் முதல் அணுகுண்டுக்கான முக்கிய பொருட்களை கொடுத்து விட்டு திரும்பிய போர் கப்பல்தான் USS Indianapolis அமெரிக்காவுக்கு திரும்பி கொண்டிருந்த இக்கப்பலை 1945 ஆம் ஆண்டு ஜீலை 30 ஆம் திகதியன்று பிலிப்பைன்ஸ். கடற்பகுதியில் வழி மறித்துத் தாக்கி மூழ்கடித்தது ஜப்பானின் I-58 நீர்முழ்கிக் கப்பல். இத்தாக்குதலில், கப்பலில் சென்ற 1,196 அமெரிக்க படை வீரர்களில் வெறும் 316 பேர் மட்டுமே உயிர் தப்பினர். இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்ட ஏழாவது நாளில் தான் இலட்சக்கணக்கான உயிர்களை காவுவாங்கிய ஹிரோஷிமா அணுகுண்டு தாக்குதல் நடைபெற்றது.

இச்சம்பவம் நடைபெற்று 72 ஆண்டுகள் கடந்த நிலையில், மூழ்கடிக்கப்பட்ட 'USS indianapolis' போர்க்கப்பலின் பாகங்கள் வடபசுபிக் கடலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் கடற் பகுதியில் 5,500 மீற்றர் ஆழத்தில் இருந்த இக்கப்பலின் பாகங்களை அமெரிக்காவை சேர்ந்த பால் ஆலன் என்பவரின் கடற்பயண ஆராய்ச்சி குழு கண்டுபிடித்துள்ளது.

ஜப்பானின் நீரமூழ்கிக் கப்பலால் அழிக்கப்பட்ட இக்கப்பலின் சிதைந்துள்ள பாகங்களின் புகைப்படங்களை அக்குழு அண்மையில் வெளியிட்டுள்ளது. இது குறித்து பேசிய பால் ஆலன், "இக்கப்பலை கண்டுபிடிப் பதற்காக நீண்டநாட்களாக முயற்சி செய்து வந்தோம்.

இது நாட்டிற்காக உயிர் நீத்தவர்களின் முக்கிய நினைவுச்சின்னமாக விளங்கும். போரில் உயிர்நீத்தவர்களுக்கு இத்தருணத்தில் வீர வணக்கங்களை வைத்துக் கொள்கிறோம் என தெரிவித்தார்.

கண்டுபிடிக்கப்பட்ட கப்பலில், அமெரிக்க வீரர்களின் தியாகம் மட்டும் அடங்கியிருக்கவில்லை, அணு குண்டு தாக்குதலால் உயிரிழந்த இலட்சக்கணக்கான அப்பாவி மக்களின் இரத்தக் கறையும் படிந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (3-8)



## சர்வதேச வர்த்தக கண்காட்சியில் குண்டுவெடித்து 6 பேர் பலி!



(டமாஸ்கஸ்)

சிரியாவில் நடந்த வர்த்தகர்கள் கண்காட்சியில் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் ஆறு பேர் பலியாகி உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

சிரிய தலைநகர் டமாஸ்கஸில் உலக வர்த்தக கண்காட்சி நடைபெற்று வந்தது. 2011-ம் ஆண்டிற்கு பிறகு அந்நாட்டில் தொடங்கிய உள்நாட்டு போரால் இந்த கண்காட்சி நிறுத்திவைக்கப் பட்டிருந்தது.

தற்போது பிரச்சினைகள் சற்று குறைந்துள்ளதை அடுத்து கடந்த வாரம் மீண்டும் உலக வர்த்தக கண்காட்சி தொடங்கியது. இதில் உலகின் சுமார் 45 நாடுகளைச் சேர்ந்த வர்த் தகர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் வர்த்தகர்கள் மாநாடு நடந்த இடத்தில் தீவிரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியதாக கூறப் படுகிறது.

இந்த தாக்குதலில் ஆறு பேர் இறந்திருக்காலாம் என தகவல் கிடைத்துள்ளது.

இந்த தகவலை சிரிய மனித உரிமைகள் கூட்டமைப்பை சேர்ந்த ரபி அப்துல் ரகுமான் என்பவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதலில் காயமடைந்த 10 பேர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் மேலும் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படைத் தளபதி சின்னையாவால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

## பதறுகிறது விமலின் கட்சி

(கொழும்பு)

**வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா இலங்கைக் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி எச்சரித்துள்ளது.**

இது தொடர்பாக தேசிய சுதந்திர முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையாவின் இனத்துவ அடையாளம் பற்றி நாங்கள் கவலை கொள்ளவில்லை. தமிழரோ, முஸ்லிமோ எவராக இருந்தாலும் தகுதியானவராக இருந்தால் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்படலாம்.

ஆனால் வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா போர் முடிவடைந்த பின்னர் கடற்படையில் இருந்து ஓய்வு பெற்றவர்.

அத்துடன், அவர் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் தூதரக பாதுகாப்பு நிபுணராக பணியாற்றியவர். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அவருக்கு ஊதியம் கொடுத்துள்ளது.

வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா கடற்படையில் இருந்து சட்டபூர்வமாக ஓய்வு பெற்றிருந்தாலும், அவரது ஓய்வு அரசியல் பழிவாங்கல் என்று கூறி தற்போதைய அரசாங்கம் அவரை மீண்டும் பணியில் சேர்த்து கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதியாக நியமித்தது. இப்போது அவரை கடற்படைத் தளபதியாகவும் நியமித்துள்ளது.



கடற்படையின் மரபுகளை மீறி, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடம் இருந்து நான்கு ஆண்டுகள் ஊதியம் பெற்ற ஒருவரை, அரசாங்கம் தளபதியாக நியமித்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு அமெரிக்கா தொடர்ச்சியாக முயற்சித்து வந்திருக்கிறது.

இப்போது அமெரிக்காவுக்கு சார்பாக செயற்படக் கூடிய ஒருவர் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் இல்லையா? என்றும் தேசிய சுதந்திர முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது. (இ-7)

# ஐ.தே.க. ஒரு மீன் கடை

# நாட்டைக் கருத்தில் கொண்டுதான் தீர்மானம் எடுப்பேன் - விஜயதாஸ



(கொழும்பு)

மீன் கடையில் சண்டையிட்டுக் கொள்வது போன்றே ஐக்கிய தேசியக் கட்சி கடந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தின் போது காணப்பட்டதாகவும், டீ.எஸ். சேனநாயக்க ஆரம்பித்த ஐ.தே.கட்சியா இது? என தனக்குள் எண்ணத் தோன்றியதாக விஜயதாஸ ராஜபக்ஷ அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரரிடம் முறையிட்டுள்ளார்.

நாட்டின் தேசிய சொத்துக்களை விற்பனை செய்வதற்கு எதிராக குரல் கொடுப்பது, கூட்டுப் பொறுப்பை மீறும் செயலா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய வளங்களை வெளிநாட்டவருக்கு வாடகைக்கு வழங்குவதும் விற்பனை செய்வதும் ஒன்றுதான் எனவும், தான் தெளிவாகவே நாட்டை கருத்தில் கொண்டு தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (இ-7)

# சு.க.மாநாட்டுக்கு மகிந்த அழைக்கப்படவில்லை

## கூட்டு எதிரணி தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது வருட பூர்த்தி மாநாட்டுக்கு அழைப்பு வந்தாலும், அதில் கலந்து கொள்வது தொடர்பில், ஆராயப்படும்" என, ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது. இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா கருத்துத் தெரிவிக்கையில்,

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது மாநாடு, எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது. குறித்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இதுவரை அழைப்பு விடுக்கப்படவில்லை" என்றார்.

இது குறித்து, கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திசாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டபோதிலும், அது தொடர்பில் எமக்கு எவ்வித பதிலும் அவர் அளிக்கவில்லை.

"முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஆவார். அதனால், அனைத்து உறுப்பினர்களுக்கும் நாம் அழைப்பு விடுத்துள்ளோம். அவர் 64ஆவது பூர்த்தி நிகழ்வில் கலந்துகொண்டு தனது வருகையை உறுதிப்படுத்தினார். அப்போது அலைபேசி ஊடாக எனக்குத் தொடர்பு கொண்டு, அவரது வருகையை உறுதிப்படுத்தினார்.

ஆனால், 65 ஆவது பூர்த்தி நிகழ்வில் அவர் கலந்து



கொள்ளவில்லை. தற்போது 66ஆவது பூர்த்தி நிகழ்வில் அவர் கலந்துகொள்வாரா? கலந்து கொள்ளமாட்டாரா என்பது தொடர்பில் உறுதிப்படக் கூற முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## நாம் ஏமாறலாமா?

நாங்கள் தி. நகரில் குடியிருந்த போது அருகில் உள்ள ஆங்கிலப் படம் ஓடும் திரையரங்கிற்கு நான் அடிக்கடி செல்வதுண்டு அங்கே டிக்கெட் கொடுக்கும் ஒரு மனிதருக்கு டிக்கெட் வாங்க வருபவர்களை ஏமாற்றுவதே தினத்தொழில்.

1.66 காசு டிக்கெட்டுக்குப் பத்து ரூபாய் கொடுத்தால் 7.34 தான் கொடுப்பார். ஒரு ரூபாயைச் சாப்பிட்டுவிடுவார். டிக்கெட் வாங்கும் அவசரத்திலும், டிக்கெட் கிடைத்த மகிழ்ச்சியிலும் படம் போய் விடப் போகிறதே என்கிற அவதியிலும் பலர் சில்லறையை எண்ணிப் பார்ப்பதே கிடையாது.

நான் தொடர்ந்து போகும் வாடிக்கையாளர் என்பதால் இவரை விரைவில் இனம் கண்டு கொண்டேன். சரியாக 1.66 தான் கொடுப்பேன். எரிச்சலாக என்னைப் பார்ப்பார். (ரூ.200 கொடுத்தால் கூட நான்கணா மிச்சம் கொடுத்து மீதிச் சில்லறை இல்லை என்பார்.)

ஒன்பது பைசா பெரிசில்லை தான். ஆனால் அதை நாமாக விட்டுக் கொடுத்தால் கதையே வேறு. இது அப்படி அல்லவே.

யார் பில் மிச்சம் என்று தந்தாலும் அவர்களை வைத்துக் கொண்டே எண்ணிப் பார்ப்பேன், ஹோட்டலில் பில் வந்தால் டோட்டல் பார்ப்பேன். பல சந்தர்ப்பங்களில் தவறுகளைக் கண்டுபிடித்து விடுவதும் உண்டு. இருபத்தைந்து பைசா வித்தியாசப்பட்டாலும் காத்திருந்து வாங்கி விடுவது உண்டு. ஆனால் டிப்ஸைத் தாராளமாக வைக்கத் தயங்கியது இல்லை.

ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு செயலிலும் நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஒரு பெரிய பொருளை வாங்கப் போகுமுன் நான்கு இடங்களில் விசாரிக்க வேண்டும். நாம் நம்ப முடியாத அளவுக்கு விலையில் வேறுபாடு இருக்கும். தகுதியில்லாத எந்தப் பொருளுக்கும் நாம் கூடுதல் விலை கொடுத்துவிடக் கூடாது.

நம் அவசரத்தையும் ஏமாளித்தனத்தையும் மற்றவர்களின் முதலீடுகளாக்கி கொள்ள நாமே இடம் தந்து விடலாகாது.

கடன் வாங்கிவிட்டுத் தராமல் ஏமாற்ற நினைத்தால் விட்டுவிடக் கூடாது. இனிப் பெயராது என்கிற முடிவுக்கு நாமாக வரவே கூடாது. கடைசி வரை வசூல் முயற்சியை கைவிட்டுவிடக் கூடாது. ஆனால் நொடித்துப் போனேன் என்று சலுகை கேட்டு எதிராளி இறங்கிவந்தால் விட்டுக் கொடுக்கலாம். தவறில்லை.

பத்துப் பைசாவிடத்திலும் கூட என்னை ஏமாற்ற நான் அனுமதிக்கமாட்டேன். ஆனால் விட்டுக் கொடுக்கும் விடயத்தில் 100 ரூபாய் ஆனாலும் தயங்கமாட்டேன் என்ற தீர்மானத்தை ஒவ்வொருவரும் தங்கள் மனச் சபையில் நிறைவேற்றி வைப்பது நல்லது.

அவர் ரொம்ப ஏமாளி என்று மற்றவர்கள் கேலிப் புன்னகையுடன் நம்மைப் பார்ப்பதை விட அவர் ரொம்ப பெருந்தன்மையானவர் என்று குறிப்பிடுவது எவ்வளவோ உத்தமம்!


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## வெளியேறுவாரா சிநேகன்



BiggBoss நிகழ்ச்சி தற்போது பரபரப்பாக ஓடிக் கொண்டிருக்கிறது. புது போட்டியாளர்களும் இப்போது நிகழ்ச்சியில் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சியில் காயத்ரி எலிமினேட் செய்யப்பட்டிருக்கிறார்.

தற்போது வந்துள்ள தகவல்படி அடுத்த வார எலிமினேஷனுக்கு சிநேகன் அதிகமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதோடு ரைசாவும் ஒருசிலரால் நோமினேட் செய்யப்படுகிறார்.

## கமலின் கோபம்



கமல்ஹாசன் எப்போதும் தன் மனதில் பட்டதை வெளிப்படையாக பேசுபவர். இவர் பிக்போஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி வருவது அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த பிக்போஸ் நிகழ்ச்சியில் வெளியேறிய காயத்ரியிடம் கமல் பேசுகையில், கொஞ்சம் ரசிகர்களையும் கண்டித்தார். ஏனெனில் பலரும் கமலும், காயத்ரியும் ஒரே ஜாதியை சேர்ந்தவர்கள், அந்த காரணத்தினால் தான் அவருக்கு சலுகை அளிக்கின்றார் என்றெல்லாம் சமூக வலைத்தளங்களில் பேசினார்கள். இதனால், கமல் உச்சக்கட்ட கோபத்திற்கு ஆளாகி, 'நான் அப்படிப்பட்டவன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?, நீங்கள் என்னை வேறு என்ன சொல்லி திட்டியிருந்தாலும் பொறுத்திருப்பேன்.

ஆனால், ஜாதியே இருக்கக்கூடாது என்று நினைப்பவன் நான். இதைச் சொல்லி பேசியது என்னை வருத்தப்பட வைத்தது', என கமல் உரிமையாக கோபப்பட்டார்.

## கொட்டு வாங்கிய காயு



பிக்போஸ் நிகழ்ச்சியிலிருந்து காயத்ரி வீட்டை விட்டு வெளியேறினார். கமலுடன் நடக்கும் உரையாடலில் ரசிகர்கள் சிலர் காயத்ரியிடம் பல கேள்விகள் எழுப்பினர். அதில் "சினேகனை நீங்கள் புறம் பேசுகிறார் என்று சொன்னீர்கள், ஆனால் நீங்களே பல தடவை அப்படி தான் நடந்து கொண்டீர்கள் என்ற கேள்விக்கு " நான் புறம் பேசவில்லை என் மனதில் பட்டதை எனக்கு தெரிந்தவர்களிடம் பகிர்ந்து கொண்டேன்.

பிக்போஸ் வீட்டிலிருந்து என்ன கற்றுக் கொண்டீர்கள் என்ற கேள்விக்கு உண்மையில் பிக்போஸ் வீட்டுக்கு வந்த போது கமல் சாரிடம் ஒரு தடவையாவது கொட்டு வாங்க வேண்டும் என்று நினைத்தேன் என்றார்.

## பெயரைச் சொல்ல அதிர்ந்த அரங்கம்

பிக்போஸ் வீட்டில் எல்லோர் கண்களுக்கும் வில்லியாக தெரிந்தவர் காயத்ரி. இவர் ஓவியாவை கஷ்டப்படுத்தியது அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில் காயத்ரி போட்டியில் வெளியே வர, ரசிகர் ஒருவர் நீங்கள் ஓவியாவை மிஸ் செய்தீர்களா? என்று கேட்டார்.

அதற்கு அவர் 'கண்டிப்பாக ஓவியாவை மிஸ் செய்தேன்' என கூறினார். உடனே அரங்கமே விசில் சத்தத்தில் அதிர்ந்தது.

## ஆர்த்தி பார்வையில் ஓவியா!

ஓவியா பிக்போஸ் நிகழ்ச்சி முடிவதற்கு முன்பே மக்கள் மனங்களை வென்றவர். ரசிகர்களை பொறுத்த வரை அவர் தான் வெற்றியாளர். இந்த போட்டியில் ஒருவராக இருந்த காமெடி நடிகை ஆர்த்தி சில நாட்களுக்கு முன் அதிலிருந்து வெளியேறினார். ஜுலியுடன் அவரது சண்டை, சக்தியுடன் கருத்து வேறுபாடு என அவருக்கு சிக்கல் இருந்தது. இந்நிலையில் அவர் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்துள்ளார். அதில் ரசிகர்களில் பல கேள்விகளுக்கு பேட்டி கொடுத்தவர். மக்கள் தன் மீது வைத்துள்ள கோபத்தை ஏற்றுக்கொண்டேன்.

எனக்கு போலியாக இருக்கக்கூடாது. அதனால் தான் ஜுலியை ஏற்றுக்கொள்ளவில்லை. ஓவியாவும், நமீதாவும் தான் எனக்கு பிடித்தவர்கள். ஓவியாவிடம் நான் பேசியபோது தான் அவரது உண்மை நிலை புரிந்தது. அவர் வெளியே தன்னை தைரியமானவர் என காட்டிக்கொண்டாலும் அவர் மனதளவில் வெகுளியானவர். அவர் அன்புக்காக ஏங்குகிறார். அவரை யாரும் புரிந்துகொள்ளவில்லை என்பதே பிரச்சி னை. அவர் தனியே வசிக்கிறார். மக்களிடம் வென்றவர் அவரே என கூறினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9 அரிவாள்களுக்கு மேல் படுத்து தூக்குக் காவடி எடுத்த பக்தர்



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா பல இலட்சக் கணக்கான பக்தர்களின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தேர்த் திருவிழாவில் யாழ். மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் நல் லூர் கந்தசுவாமி ஆலய த்தை நோக்கி காவடிகள் படையெடுத்து வந்தமை பார்ப்போரை பக்திப் பரவசத்தில் ஆழ்த்தியது.

இதன்போது இளைஞரொருவர் 9 அரிவாள்க ளு க்கு மேல்படுத்த நிலையில் தூக்குக் காவடி எடுத்துள்ளார். (இ-7)

## 'ஓம் சரவணபவ' நாட்டிய நிகழ்வு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு- இளங்கலைஞர் மன்ற மாணவர்கள், வயலின்- எஸ்.நிரஜ்ஜலா, மிருதங்கம்-ஞா.வசந் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் உடுவில் நாட்டிய கலாகேந்திரா தயாரித்து வழங்கும் ''ஓம் சரவணபவ'' நாட்டிய நிகழ்வு இடம்பெறும். இதில் நட்டுவாங்கம்-அனுசாந்தி சுகிர்தராஜ், பாட்டு- அ.அமிர்தலோஜனன், வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்-நா.சிவசுந்தரசர்மா, கீபோட்-ந.செல்வச்சந்திரன், இயக்குநர்-கலாநிதி கிருசாந்தி ரவீந்திரா, துணை இயக்குநர்-துஸ்யந்தி சுகுணன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

## அருள் நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் யாழ்.மாவட்ட மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறி விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை விரிவுரையாளர் சி.ரமணராஜா கலந்து கொள்வார்.

இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வல்லிபுரநாதர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம், வேதபாராயண அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பண்ணிசை, மஞ்சவனப்பதி முருகன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பேச்சு, சிவயோகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனம் என்பன இடம் பெறும். (இ-3)

# ஆயுட்காலம் முடியும் வரை முதலமைச்சரின் கீழ் இயங்க வேண்டும்

## அமைச்சர் அனந்தி



(கரணவாய்)

வடமாகாணசபை தனது ஆயுட்காலம் முடியும் வரை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கீழ் இயங்குமாக விருந்தால் நாங்கள் பல மாற்றங்களைக் கொண்டுவர முடியும் என அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற செவிப்புலனற்றோருக்கான விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்விளையாட்டு விழாவின் மூலம் செவிப்புலனற்றோர்கள் களைத்தவர்கள் அல்ல என்பதை எடுத்துக் காட்டுகிறது.

உங்களது தலைவர் பல பிரச்சினை தொடர்பில் தெரிவித்தார். இதற்கான முத் தீர்வு எட்டப்படாது விட்டாலும் சிறியளவான தீர்வினை எட்ட முடியும். 30 மில்லியனை ஒதுக்குவது என்பது வடமாகாண சபையால் முடியாத காரியம். புலம்பெயர் தமிழர்களிடம் இது தொடர்பில் கோரிக்கை வைக்க முடியும். உங்களுக்கு மாடு வளர்ப்பினை மேற்கொள்வதற்கு மாடுகளை எம்மால் பெற்றுத்தர முடியும். அவுஸ்திரேலியாவில் இருந்து 25000 நல்லின மாடுகள் இறக்கப்படவுள்ளன. இதில் 50 வீதம் மானியமாகவும் 50 வீதம் அன்பளிப்பாகவும் வழங்கப்படவுள்ளன. இதில் 50 வீதத்தை நாங்கள் கொடுப்பது பற்றி ஆலோசிக்கலாம்.

நான் அமைச்சுப் பதவியினைப் பெற்றதன் பின்னர் கிராமங்கள் தோறும் சென்று மக்களின் குறைகளைக் கேட்டு வருகின்றேன்.

பத்துக் கோரிக்கைகளை வடமாகாண சபை முன்வைக்கின்றபோது அதில் இரண்டு கோரிக்கைகளையாவது நிறைவேற்ற முயற்சிக்கின்றோம்.

ஒரு பக்கம் இன அழிப்புப் போரில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கேட்கின்ற எமது மனித உரிமைச் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருந்தாலும் மறுபக்கம் மக்களின் அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்தும் முன்னெடுப்போம். முதலமைச்சரின் எண்ணப்படி கிராம மக்களுக்கான எமது செயற்றிட்டத்தை தொடர்ந்தும் செய்து கொண்டிருக்கின்றோம் என்றார். (இ-60)




அழைப்பிதழ்

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு,
கந்தபுராண வாழ்வியில் தொடர்பான
விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும்

கந்தபுராண எழுச்சி விழா

"கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்"

நிறைவுநாள் வைபவம்

காலம் : 22.08.2017 செவ்வாய்க்கிழமை மாலை 6.40மணி
இடம் : நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம்

திருமுன்னிலை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
ஆதீன குருமுதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

தலைமை
திரு. அ. உமாமகேஸ்வரன்
பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

பிரதம விருந்தினர்
மாண்புமிகு டி. எம். சுவாமிநாதன்
அமைச்சர், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு

விசேட நிகழ்வுகள்

* அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகள்
* இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட ஆன்மீகப் பிரசாரகர்களுக்கான பயிற்சி நெறியில் சித்தி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு
* கந்தபுராண நூலறிவுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களிற்கான பரிசளிப்பு நிகழ்வு
* நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு வசந்தம் TV, வசந்தம் FM என்பன இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடாத்திய சித்திரப் போட்டியில் வெற்றியீட்டியவர்களிற்கான பரிசளிப்பு நிகழ்வு.

இக் கந்தபுராண எழுச்சி விழாவிற் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும்
இந்து மத அலுவல்கள் அமைச்சு

(இ-93395)


# நல்லூர் கந்தனுக்கு இன்று பூங்காவனத் திருவிழா



## இந்துவாக வாழ்வோம்

பல்லவி
கந்தனே கார்த்திகேயனே நல்லூர் முருகனே
பாலனே சிவபாலனே சிவபால சக்தி நாதனே
அனுபல்லவி
அண்டமெலாம் உலாவி ஆறுதல் தருபவன் நீ
ஆறுமுகமாய் நின்று அருள்புரிபவனே
சரணம்
ஓசை மணி அடித்து அடித்து பக்தரிடையே வருவான்
ஊதும் குழல் ஊதி ஊதி உள்ளங்களில் உறைவான்
கீதம் இனிது பாடிப்பாடி பரவசமாய் சுற்றுவான்
ஆடும் களிநடத்திலே ஆனந்தம் அளிப்பான்
(கந்தனே)

திருமதி சாந்தா வீரசிங்கம்
சின்மயா மிஷன்

## சஞ்சலம் போக்கிடும் சக்தியின் மைந்தன்

பாலகனை தேடி
பாற்குடங்கள் ஏந்திவர
பக்திமணம் பெருகுது

கந்தனை தேடி
காவடிகள் சுமந்துவர
கவலைகள் மறையுது

நல்லூர் கந்தனை
நாடி வர
நல்வினைகள் பெருகுது

சக்தியின் மைந்தனை
கைதொழுதிட
சஞ்சலம் நீங்குது

பாரதிதாசன் சத்யா
அல்வாய் வடக்கு, அல்வாய்.

## மாட்சிமை பெற காட்சிதரும் முருகா

நல்லருள் தந்து நலமான வாழ்முறை நாம் பெற்றிடவே
வல்லான் நீ நல்வழிகாட்டி வேண்டுவ தீய்ந்தருள்வாய்
தொல்லைகள் போக்கி உனைத் தொழுவார் மனம் மகிழவே
அல்லல் நீக்கி ஆனந்த வாழ்வியல் தந்திடும் நல்லை முருகவேளே

கரம் கூப்பித் தொழுதுமே நம் கவலை போக்கவருமடியார் தம்
சிரம் தாழ்த்தியுன் திருப்பாதார விந்தம் தொழுதிடும் போது
பரம்பொருள் மைந்தனாய் நின்று பெரும் பேறருள்பவனே
வரமுன்னிடம் கேட்போர் மனம் உவகை பெற வாழ்வும் தருவாயே

கலைஞர் கருணை மாலைமணி

## களனி கதிர்விட வேண்டுமடி!

நல்லைத் திருத்தலம் நாடுங்கடி- நின்று
நாளும் அவன்புகழ் பாடுங்கடி!
எல்லையில்லாத அவன் கருணை- என்றும்
ஏற்றம் பெற வழி தேடுங்கடி!

கன்னித் தமிழ்மணம் வீசுதடி- அங்கு
கந்தனருள் நிதம் கூடுதடி
பின்னிப் பிணைந்தெமைக் காக்குதெடி- பாரில்
வெற்றி பெருகிட வேண்டுமடி!

கலாபூஷணம் கலைமாமணி
கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## நல்லைக்கந்த சந்தப் "பா"

பழுத்த நாயனார் பாடிச் சென்றதைப்
பற்றுடன் பல முறைகள் சாற்றியே
விளித்து வேலனைக் கவியி லேற்றவே
விழைந்த னன்னறி வற்ற பேதையான்
கொழிக்குஞ் செந்தமிழ் இழைக்கும் பாமகன்
கொஞ்சும் பாதத்தில் தஞ்சங் கண்டனன்
எழுத மட்டும் எழுந்த தென்கரம்
எடுத்துச் சொல்பவன் நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவி கருணாநாயக்கவினால் அழைப்பு விடுக்கப்பட்ட வெளிநாடுகளிலுள்ள தூதுவர்களுக்கான கூட்டம் இரத்து!

(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவர்களுக்காக கொழும்பில் அடுத்த மாதம் நடக்கவிருந்த கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டதை வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதுவர்களுக்கு அறிவிக்கும் வகையில் சுற்றுநிருபமொன்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணையும் திஸ்ஸ

(கொழும்பு)



ஐக்கிய தேசியக் கட்சிக்கு வருமாறு அதன் பொதுச் செயலாளர் தன்னை அழைத்துள்ளதாகவும் இதற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், தற்போதைய அரசியல் நிலவரங்கள் குறித்து தான் ஆராய்ந்து வருவதாகவும் முக்கிய தேர்தலுக்குரிய அறிவிப்பு வெளியான பின்னர் தனது அரசியல் பயணம் மீண்டும் ஆரம்பமாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி வகித்த திஸ்ஸ அத்தநாயக்க கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஐ.தே.கவிலிருந்து வெளியேறி மகிந்தவுக்கு ஆதரவு வழங்கினார்.

இதன்னால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் அவரது அரசியல் வாழ்வு கேள்விக்குறியானது. அத்துடன், மகிந்த அணியுடனான அரசியல் உறவுகளையும் முறித்துக் கொண்டுள்ளார்.

இந்த நிலையிலேயே ஐ.தே.கவுக்குள் மறுபடியும் வருவதற்கு அவர் முயற்சித்து வருகிறார் எனக் கூறப்படுகின்றது. அதை உறுதிப்படுத்தும் வகையில் தற்போது கருத்து வெளியிட்டுள்ளார்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர், திஸ்ஸ அத்தநாயக்க மறுபடியும் கட்சிக்குள் வருவதை விரும்பவில்லை எனவும் கூறப்படுகின்றது.

மாணவர் பருவத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக அரசியல் பயணத்தை ஆரம்பித்த திஸ்ஸ அத்தநாயக்க; சுமார் 35 வருடங்களுக்கு மேலாக அக்கட்சியில் அங்கம் வகித்தார்.

மேலும், கட்சித் தலைமைக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் உடனிருந்து ஆதரவு வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 25.07.2017 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர். உயர்திரு சின்னத்துரை கிருஸ்ணபிள்ளை
### (ஓய்வுநிலை தபாலதிபர்) அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் 24.08.2017 வியாழக்கிழமை காலை கீரிமலையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்தியம் நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-9384)

பூதராயர் கோவில் ஒழுங்கை, பருத்தித்துறை. / TP: 077 960 5119, 077 234 2140, 076 645 3274 / இவ்வண்ணம் குடும்பத்தினர்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1168

கணேஸ்




லதா




விதுரா




மாதவி




பாமினி




வரதன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அண்ணாந்து பார்த்துக் கொண்டு முகத்தில் துப்புகின்றனர்

# அமைச்சர்களே அரசை விமர்சிக்கும் வரலாறு வேறெங்கும் கிடையாது!

## மகிந்த ராஜபக்ஷ கடும் விமர்சனம்



உலகில் எந்தவொரு அரசாங்கத்தையும் அதன் அமைச்சர்களே விமர்சித்த வரலாறு கிடையாது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விமர்சித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் அண்ணாந்து பார்த்துக்கொண்டு தன் முகத்தில் தானே துப்பிக் கொள்கிறது. இந்த அரசாங்கத்தின் அமைச்சர்களே அரசாங்கத்தையும் அதன் செயற்பாடுகளையும் பகிரங்கமாக விமர்சிக்கின்றனர்.

உலகில் எந்தவொரு அரசாங்கத்தையும் அதன் அமைச்சர்களே விமர்சித்த வரலாறு கிடையாது.

ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தில் அவ்வாறு நடக்கின்றது. அந்த வகையில் இந்த அரசாங்கம் அண்ணாந்து பார்த்து தன் முகத்தில் தானே காறித்துப்பிக் கொள்கின்றது.

அதேநேரம் அரசாங்கத்தை விமர்சிக்கும் அமைச்சர்களும் தங்கள் பதவிகளிலிருந்து விலகத் தயாராக இல்லை. அரசாங்கத்தை மட்டுமன்றி சக அமைச்சர்களையும் விமர்சித்துக் கொண்டு வெட்கம் கெட்டுப்போய் தங்கள் பதவிகளில் தொடர்ந்திருக்கின்றார்கள் என்றும் மகிந்த ராஜபக்ஷ கடுமையாக விமர்சித்துள்ளார்.

தனது வாசஸ்தலத்தில் கூட்டு எதிரணி உறுப்பினர்களை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு விமர்சித்துள்ளார். (இ-7)

## புலமைப்பரிசில் பரீட்சையில் விடையளிக்க கண்டியில் உரியகாலம் வழங்கவில்லை

(கொழும்பு)

கண்டி பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக உரிய கால அவகாசம் வழங்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

கண்டி, ஜம்புகஹபிட்டிய, பரணகம மகா வித்தியாலயத்தில் ஒரு பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதிய மாணவர்கள் இந்த பிரச்சினைக்கு முகங்கொடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளுக்காக காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகி முற்பகல் 10.15 மணி வரை நேரம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த மாணவர்களுக்கு வினாத்தாள் காலை 09.35 மணியளவில் வழங்கப்பட்டுள்ளதுடன், முற்பகல் 10 மணியுடன் விடைத்தாள்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## சைட்டம் கல்லூரிக்கு புதிய மாணவர்கள்

சைட்டம் மருத்துவக் கல்லூரிக்குப் புதிய மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் தலைவர் மருத்துவர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மாலபேயில் அமைந்துள்ள தனியார் மருத்துவப் பல்கலைக்கழகமான சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக பல்வேறு தரப்பினர்கள் போர்க்கொடி தூக்கியுள்ள நிலையில் புதிய மாணவர்கள் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் சுமார் 300 புதிய மாணவர்களை சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவித்துள்ள மருத்துவர் நெவில் பெர்னாண்டோ உள்நாட்டு மாணவர்கள் 200 பேரும் வெளிநாட்டு மாணவர்கள் 100 பேரும் இதன்போது உள்வாங்கப்படுவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்தின் ஒருசில அமைச்சர்கள் குறித்து விமர்சித்துள்ள மருத்துவர் நெவில் பெர்னாண்டோ, அவர்கள் இர[illegible]டு தோணிகளில் கால்வைத்திருப்பதாக சாடியுள்ளார்.

அவ்வாறான அமைச்சர்களை உடனடியாக பதவிகளிலிருந்து நீக்க வேண்டுமென்று தான் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுப்பதாகவும், அவர்களைப் பதவியில் தொடர விடுவது அரசாங்கத்துக்கு ஆபத்தானது என்றும் மருத்துவர் நெவில் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# விஜயதாஸ ராஜபக்ஷ பதவி விலக வேண்டும்

## சூசகமாகக் கூறிய அமுனுகம





(கொழும்பு)

அமைச்சரவை பொறுப்புக்களை மீறும் எந்த அமைச்சராக இருந்தாலும் பதவி விலக வேண்டும் என்று அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

விஜயதாஸ ராஜபக்ஷ தொடர்பிலேயே அவரின் பெயரைக் குறிப்பிடாமல் சரத் அமுனுகம இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுக குத்தகை தொடர்பில் அமைச்சரவையின் தீர்மானத்தை வெளி மேடை ஒன்றில் வைத்து விஜயதாஸ ராஜபக்ஷ விமர்சித்திருந்தார்.

இந்தநிலையில் அவரை பதவி நீக்க வேண்டும் என்று அவரின் சொந்தக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பலரும் கோரி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளராக உள்ள இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா, நீதியமைச்சர் விஜயதாஸ பதவி விலகினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைய வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதற்கு மத்தியிலேயே ஜனாதிபதியினால் விசேட திட்டங்களுக்கான அமைச்சர் சரத் அமுனுகம, விஜயதாஸ பதவி விலக வேண்டும் என்ற கருத்தை சூசகமாக வெளியிட்டுள்ளார். (இ-7)

## தங்கம் கடத்த முற்பட்ட 4பேர் விமான நிலையத்தில் கைது

ஒரு தொகை தங்கத்தை சட்டவிரோதமாக இந்தியாவிற்கு கடத்திச் செல்ல முற்பட்ட நான்கு நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியர் ஒருவரும் மூன்று இலங்கையர்களுமே இவ்வாறு நேற்று அதிகாலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 20, 23, 24 மற்றும் 38 வயதுடையவர்கள் என்று கூறப்பட்டுள்ளது.

387.81 கிராம் நிறையுடைய தங்கம் இதன்போது சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றின் பெறுமதி 2,132,955 ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கடத்த முற்பட்ட தங்கங்கட்டிகள் சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களில் ஒருவருக்கு 10,000 ரூபா படி அபராதம் விதிக்கப்பட்டதாக சுங்கப் பிரிவு கூறியுள்ளது. (இ-7)

## எனது செல்லப்பிராணியிடம் மட்டும்தான் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை

## விரக்தியில் மகிந்த

தனது வீட்டின் செல்லப் பிராணி மாத்திரமே பொலிஸ் விசாரணைகளில் இருந்து தப்பித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள தனது இல்லத்தில் நேற்று முன்தினம் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடும் போது முன்னாள் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஷிராந்தி ராஜபக்ஷ மற்றும் அவரது இளைய மகன் ரோஹித ராஜபக்ஷ ஆகியோரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டமை குறித்து முன்னாள் ஜனாதிபதியின் கருத்தை கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வினவியுள்ளனர்.

"என் குடும்ப உறுப்பினர்கள் அனைவரிடமும் தற்போது விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இன்னும் டொமியாவிடம் (செல்லப் பிராணியான நாய்) மட்டுமே விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என மகிந்த குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணைகள் அனைத்தும் அரசியல் பழிவாங்கலின் ஒரு பாகமாக இருந்தன எனவும் அவர் கூறியுள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2017-16.09.2017



**அனுபவம் தான் சிறந்த வழிகாட்டி என்று கூறும் கும்ப இராசி அன்பர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி 10ஆம் இடத்தில் பலம் பெற்று விளங்குகிறார். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். கேட்ட இடத்தில் தொகை கிடைக்கும். வளர்ச்சிப் பாதைக்கு வழிகாட்டும் விதத்தில் கிரக நிலைகள் சாதகமாக இருக்கின்றன. மாதத் தொடக்கத்தில் சூரிய பலம் நன்றாக இருக்கிறது. சுக்ரனும் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார்.

இராகு-கேதுக்களின் பெயர்ச்சியும், உங்களுக்கு மிகுந்த நன்மை தருவதாக அமைந்துள்ளது. உங்கள் இராசியில் இது வரை இருந்த கேது விலகியதால், மனக்குழப்பம் அகலும். விலகிச் சென்ற இராகு-கேதுக்களை நீங்கள் விரும்பிச் சென்று வழிபட வேண்டியது அவசியமாகும். முறையான சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வதோடு, அஷ்டமத்தில் குரு சஞ்சரிப்பதால் அதற்குரிய குரு பிரீதியும் செய்வது நல்லது. இம்மாதம் குருப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இந்தப் பெயர்ச்சிக்குப் பிறகே உங்கள் வாழ்வில் வசந்தம் உருவாகப் போகிறது. நினைத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நேச மனப்பான்மை கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

பூமி வாங்கும் யோகம் முதல் புதிய வாகனம் வாங்கும் யோகம் வரை உங்களுக்கு குருவின் பார்வையால் கிடைக்கப் போகிறது. அதேநேரத்தில் சூரிய பார்வை உங்கள் இராசியில் பதிவதால் கோபத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு செயற்பட வேண்டும். இணைந்து பணிபுரியும் நபர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

12இல் கேது சஞ்சரிப்பதால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வுடன் கூடிய இடமாற்றம் கிடைக்கப் பெற்று மகிழ்ச்சியடைவீர்கள். 6ஆம் இடத்து ராகுவால் கடன் சுமை குறைய வழிபிறக்கும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான வாய்ப்பு உருவாகும்.

**கடக சுக்ரனும், சிம்ம சுக்ரனும**

ஓகஸ்ட் 22ஆம் திகதி கடகத்திலும், செப்டெம்பர் 15ஆம் திகதி சிம்மத்திலும் சுக்ரன் உலா வரப்போகிறார். இந்த இரண்டு பெயர்ச்சிகளுமே நன்மை தரும் விதத்தில் அமையப் போகிறது. நெருக்கடி நிலை மாறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். மருத்துவச் சிகிச்சையின் மூலம் ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்வீர்கள். விலையுயர்ந்த ஆபரணங்கள் வாங்குவதில் உங்கள் விருப்பத்தை செலுத்தும் நேரமிது.

## நெருக்கடி நிலை மாறும்;தேவைகள் பூர்த்தியாகும்

**ஜோதிடக் கலாமணி சிவல்பூரி சிங்காரம்**

**சிம்ம செவ்வாய் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 28ஆம் திகதி சிம்மத்திற்கு செவ்வாய் வருகிறார். 3,10 இற்கு அதிபதியான செவ்வாய், சப்தம ஸ்தானத்திற்கு வரும் பொழுது உங்கள் தொழில் வளர்ச்சிக்கு சகோதரர்களின் உதவி கிடைக்கும். விற்ற சொத்துகளுக்கு இணையாக மீண்டும் புதிய சொத்துகளை வாங்கும் யோகம் உருவாகும். சகோதர பாசம் அதிகரிக்கும். பத்திரப்பதிவில்




இருந்த தடைகள் அகலும். புனிதப் பயணங்களை மேற்கொள்வீர்கள். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியான புதன், சப்தம ஸ்தானத்திற்கு வரும் பொழுது பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நிறைவேற்றுவீர்கள். செய்தொழிலில் ஏற்பட்ட சிக்கல்கள் அகலும். உத்தியோகத்தில் வரவேண்டிய சம்பளப் பாக்கிகள் வந்து சேரும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

செப்டெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்குச் செல்லும் குருவின் பார்வை உங்கள் இராசியின் மீது 5ஆம் பார்வையாகப் பதிகின்றது. குருபார்க்கக் கோடி நன்மை என்பதால் கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். அடுக்கடுக்காக நல்ல பலன்கள் நடைபெறும். 3,5 ஆகிய இடங்களையும் குரு பார்ப்பதால் முன்னேற்றம் அதிகரிக்கும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள**

இம்மாதம் எதிர்பார்ப்புகள் நடைபெறும் மாதமாகும். குடும்பத்தில் உள்ளவர்கள், உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

பிள்ளைகள் வழியில் சுபகாரியப் பேச்சுகள் முடிவாகும். செப்டெம்பர் 2ஆம் திகதிக்கு மேல் உங்கள் கனவுகள் நனவாகும். காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். உடன் பிறப்புகள் உறுதுணையாக இருப்பர்.

மனைகட்டிக் குடியேற வேண்டும் என்ற ஆசை நிறைவேறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோசத் தகவல் வந்து சேரும். சதுர்த்தி விரதமிருந்து ஆனைமுகப் பெருமானை வழிபடுவதோடு, சனிக்கிழமைதோறும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.



**நிகழ்காலத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்கும் மீன இராசி அன்பர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத்தின் தொடக்கத்தில் 5இல் இராகுவும், 11இல் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். குருவின் நேர் பார்வை செப்டெம்பர் முதலாம் திகதி வரை உங்கள் இராசியில் பதிவாகிறது. அதன் பிறகு அஷ்டமத்தில் குரு அடியெடுத்து வைக்கிறார்.

8இல் குரு வரும்பொழுது இடர்பாடுகள் அதிகரிக்கும். ஆரோக்கிய தொல்லை வரலாம். எதிர்பார்த்த காரியங்கள் நடைபெறுவதில் தாமதம் உண்டாகும். உறவினர் பகை ஏற்படும். ஊர்மாற்றங்களும், இடமாற்றங்களும் திருப்தி தருமா? என்பது சந்தேகம் தான். மாதத்தின் பிற்பகுதியில் எதையும் யோசித்துச் செய்வதன் மூலமே யோகங்கள் ஏற்படும்.

பஞ்சம ஸ்தானத்தில் இராகு சஞ்சரிப்பதால், பிள்ளைகள் மூலம் விரயங்கள் ஏற்படலாம். 5ஆம் இடத்தில் செவ்வாய், புதன் சேர்க்கை பெற்றிருக்கிறார்கள். உங்கள் இராசிக்கு 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பஞ்சமஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது, நிலம் தொடர்பான பிரச்சினைகள் அகலும். பாகப்பிரிவினைக்கு இதுவரை ஒத்துவராத உடன் பிறப்புகள் இனி ஒத்துவருவர். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர்.

குருப்பெயர்ச்சிக்கு முன்பு ஒரு சிலருக்கு திடீரென திருமணப் பேச்சுகள் முடிவாகலாம். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் அனுகூலத்தோடு தொழில் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்வீர்கள். தனாதிபதி மாதத் தொடக்கத்தில் நீச்சம்பெற்றுள்ளதால் சுபச்செலவுகள் அதிகரிக்கும்.

ஒன்பதாமிடத்தில் சனி பகவான் உலா வருகிறார். எனவே தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். சகோதரர்களின் நலனில் அக்கறை காட்டும் பெற்றோர் நமக்கு எதுவும் செய்யவில்லையே என்று கவலைப்பட்டவர்கள், இப்போது பெற்றோர்களின் பாசமழையில் நனைவீர்கள். இம்மாதம் விநாயகர் சதுர்த்தி வருவதால் தும்பிக்கையான் வழிபாட்டை மேற்கொள்வதோடு நம்பிக்கையோடு தட்சிணாமூர்த்தி மற்றும் இராகு, கேதுக்களின் சிறப்பு வழிபாடுகளையும் மேற்கொள்ளுங்கள்.

**கடகச் சுக்ரனும், சிம்ம சுக்ரனும**

ஓகஸ்ட் 22ஆம் திகதி கடக இராசியிலும், செப்டெம்பர் 15ஆம் திகதி சிம்ம இராசியிலும் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். கடகத்தில் சுக்ரன் சஞ்சரிக்கும் பொழுது, குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். தொழிலில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலையும் ஏற்படலாம். சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கும் பொழுது, விபரீத இராஜயோக அடிப்படையில் எண்ணற்ற நற்பலன்கள் கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருந்து, நீங்கள் தீட்டும் திட்டங்களை வெற்றி பெறச் செய்வர்.




**சிம்மச் செவ்வாய் சஞ்சாரம்!**

ஓகஸ்ட் 28ஆம் திகதி சிம்மத்திற்கு செவ்வாய் வருகிறார். அவர் சூரியனோடு இணைந்து செயற்படுவதால் அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரப் பதவிகள் கிடைக்கலாம். வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். வங்கிகளில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் நேரமிது.

## எண்ணற்ற நற்பலன் கிடைக்கும்

**சிம்ம புதன் சஞ்சாரம்!**

கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான புதன், செப்டெம்பர் 2ஆம் திகதி சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இந்த காலத்தில் உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். எதிர்பாராத பணிமாற்றம், நன்மை தரும் விதத்திலேயே அமையும். பணிச் [illegible] ஏற்ற விதத்தில் ஆதாயம் கிடைக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பும் கைகூடலாம்.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

செப்டெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்கு குருபகவான் செல்கிறார். அஷ்டமத்து குருவாக வருவதால், முன் யோசனையுடன் செயற்பட்டால் முன்னேற்றத் தடைகள் எதுவும் வராது. பதவி மாற்றங்களும், பணிமாற்றங்களும் இயற்கையாகவே அமையும். இருப்பினும் அதன் பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிவதால், குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரிப்பு கிடைக்கும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். கூட்டுத் தொழில் தனித் தொழிலாக மாறலாம். நீண்ட தூரப் பயணங்கள் உருவாகும். நட்பால் நல்ல காரியம் நடைபெறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்!**


இம் மாதம் முதல் பாதியில் முன்னேற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். பிற்பாதியில் குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குடும்பச்சுமை கூடும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. தாய் வழி ஆதரவு கிடைக்கும். உடன்பிறப்புகள் பாசத்தோடு பழகி, பணத்தேவையைப் பூர்த்தி செய்வர். பிள்ளைகளால் விரயமுண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்கள் திடீர் இடமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். மேலதிகாரிகளின் ஆதரவு குறையலாம். செவ்வாய் சிம்மத்தில் சஞ்சரிக்கும் நேரம், செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். ஆனைமுகன் வழிபாடும், ஆறுமுகன் வழிபாடும் அதிக நற்பலன்களை வழங்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பண்ணையார்



கொள்ளக்குடி என்னும் கிராமத்தில் ஒரு பெரிய பண்ணையார் இருந்தார். பணம் நிறைய இருந்த அவரிடம் இரக்க குணம் சிறிதளவு கூட இல்லை. ஏழை எளிய விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைச்சல் சரியாக இல்லாத நேரங்களில், பண்ணையாரிடம் வட்டிக்கு கடன் வாங்கி, தங்கள் குடும்பத்தை நடத்தி வந்தனர். பண்ணையார் தன்னிடம் வட்டிக்கு கடன் வாங்கிய விவசாயிகளின் நிலத்தை, ஏதாவது ஒரு வழியில் ஏமாற்றி, தனக்கிருந்த நிலத்தோடு சேர்த்து வந்தான்.

அசலையும், வட்டியையும் குறித்த காலத்தில் செலுத்த முடியாத ஏழை விவசாயிகள் பண்ணையாரின் பிடியில் சிக்கித் தவித்தனர்.

பண்ணையாரின் மனைவி நல்ல உள்ளம் கொண்டவள். தன் கணவனின் செயல்கள் பிடிக்காமல், அடிக்கடி தன் கணவனை வார்த்தைகளால் கண்டித்து வந்தாள். அவள் தன் கணவனிடம், "ஏழைகள் தங்கள் வியர்வையை நிலத்தில் சிந்தி, அதில் கிடைக்கும் கூலி முழுவதையும் வட்டியாக வயிற்றெரிச்சலோடு கொடுக்கும் போது, அதை வாங்கி நம் பணப்பெட்டியில் போடுவது மிகப் பெரிய பாவம். நீங்கள் இதுநாள் வரை ஏழைகளின் வயிற்றெரிச் சலால் நிறைய பாவ மூட்டைகளைச் சேர்த்து விட்டீர்கள். இனிவரும் காலங்களிலாவது ஏழை எளியோரின் கஷ்டங்களை புரிந்து கொண்டு வாழக் கற்றுக் கொள்ளுங்கள்" என்று அடிக்கடி தன் கணவனுக்கு புத்திமதிகள் சொல்லி வந்தாள்.

மனைவி சொல்வதை காதில் வாங்காத பண்ணையார், தன் போக்கிலேயே வாழ்ந்து வந்தான்.

ஒரு ஏழை விவசாயியின் மனைவி பண்ணையாரிடம் கடன் வாங்கி, தன் மகளின் திருமணத்தை நடத்தினாள். வாங்கிய கடனுக்காக அசலையும், வட்டியையும் திருப்பித் தர முடியாமல் தவித்த அவள், பண்ணையாரிடம் சென்று தனக்கு கொஞ்ச நாட்கள் அவகாசம் தருமாறு கேட்டாள்.

பண்ணையார், விவசாயியின் மனைவியின் வார்த்தைகளுக்கு செவி சாய்க்கவில்லை. அவள் நிலத்தை தனதாக்கிக்கொண்டான். தலைமுறை தலைமுறையாக ஆண்டு அனுபவித்து வந்த நிலம் பறிபோனதால், துக்கத்தின் எல்லைக்கே சென்றுவிட்ட விவசாயியின் மனைவி தன் நிலத்தின் மீது படுத்து, உருண்டு அழுதாள். தன் நிலத்தை தனக்கு திருப்பி தந்துவிடும்படி பண்ணையாரிடம் கெஞ்சினாள். பண்ணையார் நெஞ்சில் சிறிதும் ஈரமில்லாமல், விவசாயியின் மனைவியை விரட்டி விட்டான்.

தன் மனதை தேற்றிக்கொண்ட விவசாயியின் மனைவி, பண்ணையாரை பார்த்து, "ஐயா! இந்த பரந்த நிலத்து மண்முழுவதும் இப்போது உங்களுக்கு சொந்தம். பல ஆண்டுகள் எனக்கு சொந்தமாக இருந்த இந்த நிலத்து மண்ணில் ஒரு கோணிப்பை மண்ணை எனக்கு தரக் கூடாதா? தயவு செய்து தாருங்கள்" என்று கேட்டாள்.

"ஒரு கோணி மண்தானே..." என்று பண்ணையார் மண்ணை நிலத்தில் இருந்து எடுத்துக் கொள்ள அனுமதித்தான்.

உடனே விவசாயியின் மனைவியும், அருகில் இருந்த தன் உறவினரிடம் இருந்து ஒரு கோணிப்பையை வாங்கி அதில் முழு கோணிபிடிக்கும் அளவுக்கு மண்ணை நிரப்பினாள். பிறகு கோணியின் வாயை கட்டினாள். எதிரில் நின்றுக் கொண்டிருந்த பண்ணையாரை பார்த்த விவசாயியின் மனைவி, "ஐயா! தயவு செய்து இந்த மூட்டை மண்ணை என் தலையில் தூக்கி வையுங்கள்" என்றாள்.

பண்ணையாரும் மண் மூட்டையை தூக்கிப் பார்த்து, தூக்கமுடியாமல் நின்றார். விவசாயியின் மனைவி பண்ணையாரை பார்த்து, "ஐயா நான் வயிற்றெரிச்சலோடு இந்த நிலத்தை உங்களுக்கு கொடுத்தேன். நீங்களும் இந்த நிலத்தை என்னிடம் இருந்து அபகரித்துக் கொண்டீர்கள். என்னுடைய முழு சம்மதம் இல்லாமல், என் நிலத்தை நீங்கள் அபகரித்துக் கொண்டதன் மூலமாக, என் நிலத்தில் உள்ள மொத்த மண்ணின் அளவு பாவத்தை சம்பாதித்து வைத்துள்ளீர்கள். என் நிலத்தின் சிறு பகுதி தான் நான் கட்டி வைத்துள்ள இந்த மண்மூட்டை. உங்களுக்கு சொந்தமான பாவமூட்டை. இந்த சிறிய பாவ மூட்டையை தூக்க தத்தளிக்கும் நீங்கள், இந்த பரந்த நிலத்தின் மொத்த பாவத்தை எப்படி சுமக்கப் போகிறீர்களோ தெரியவில்லை" என்றாள். விவசாயியின் மனைவி கூறியதைக் கேட்ட பண்ணையார், சற்று நேரம் ஆடிப் போய் விட்டான். இதுவரை நிறைய பேருடைய வயிற்றெரிச் சலை சம்பாதித்த பண்ணையார், விவசாயியின் மனைவி சொன்ன வார்த்தைகளால், சிந்திக்க ஆரம்பித்தான். தான் இவ்வளவு காலம் ஏழைகளுக்கு இழைத்த கொடுமைகளை எண்ணிப் பார்த்தான். தான் செய்தது எவ்வளவு பெரிய பாவம் என்று உணர்ந்தான். தன் கண்களை திறந்து தான் நல்லறிவு பெற அறிவுரை வழங்கிய விவசாயியின் மனைவியை கைகூப்பி வணங்கினான். தன்னை மன்னிக்கும்படி விவசாயியின் மனைவியிடம் கேட்டுக் கொண்ட தோடு, அவளிடம் இருந்து அபகரித்த நிலத்தை அவளுக்கே திருப்பிக் கொடுத்து விட்டான்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

08.2017
22

- 1639 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியினர் நாயக்கர்களிடம் இருந்து வாங்கிய நிலத்தில் மதராஸ் நகரத்தை (தற்போதைய சென்னை) அமைத்தார்கள்.
- 1642 - இங்கிலாந்தின் முதலாம் சார்ல்ஸ் ஆங்கில நாடாளுமன்றத்தை "துரோகிகள்" என வர்ணித்தான். ஆங்கில உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1717 - ஸ்பானியப் படைகள் சார்டீனியாவில் தரையிறங்கினர்.
- 1770 - ஜேம்ஸ் குக் தனது ஆட்களுடன் ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரையை அடைந்தான்.
- 1780 - க்ப்டன் ஜேம்ஸ் குக்கின் கப்பல் (HMS Resolution) இங்கிலாந்து திரும்பியது. (ஹவாயில் குக் கொல்லப்பட்டான்).
- 1798 - ஐரியக் கிளர்ச்சிக்கு ஆதரவாக பிரெஞ்சுப் படைகள் அயர்லாந்தில் தரையிறங்கினர்.
- 1831 - வேர்ஜீனியாவில் நாட் டர்னர் தனது தாக்குதலை ஆரம்பித்தான். 50 வெள்ளையினத்தினரும், பல நூற்றுக் கணக்கான கறுப்பின அமெரிக்கர்களும் கொல்லப்பட்டனர்.
- 1848 - நியூ மெக்சிகோ ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1860 - பிரித்தானியக் கடற்படையின் உதவியுடன் கரிபால்டியின் படைகள் சிசிலியில் இருந்து இத்தாலியின் பெரும்பரப்பினுள் நுழைந்தனர்.
- 1864 - 12 நாடுகள் இணைந்து ஹென்றி டியூனாண்ட் தலைமையில் ஜெனீவாவில் செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தார்கள்.
- 1875 - சக்காலின் மற்றும் கூரில் தீவுகள் தொடர்பாக ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1911 - பாரிசில் களவெடுக்கப்பட்ட மோனா லிசா ஓவியம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1926 - தென்னாபிரிக்கா, ஜோகானஸ்பேர்க்கில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1932 - தொலைக்காட்சி சேவையை முதன் முதலாக பிபிசி சோதித்தது.

பிறப்புகள்

- 1877-ஆனந்த குமாரசுவாமி, கலாயோகி, ஈழத்து எழுத்தாளர் (இ. 1947)
- 1927-டி.ஜி.லிங்கப்பா, திரைப்பட இசையமைப்பாளர் (இ. 2000)
- 1955-சிரஞ்சீவி, இந்திய நடிகர், அரசியல்வாதி

இறப்புகள்

- 1485 - இங்கிலாந்தின் மூன்றாம் ரிச்சர்டு (பி. 1452)
- 1973-செமியோன் ரூதின், சோவியத் மொழியியலாளர், இந்தியவியலாளர், தமிழறிஞர் (பி. 1929)
- 1982-ஏக்நாத் ராமகிருஷ்ண ரானாடே, இந்திய விடுதலைப் போராட்ட வீரர், சீர்திருத்தவாதி (பி. 1914)
- 2010-ஏ. கே. வீராசாமி, தமிழ்த் திரைப்பட நடிகர்
- 2014-உ. இரா. அனந்தமூர்த்தி, கன்னட எழுத்தாளர் (பி. 1932)

சிறப்பு நாள்

- சென்னை தினம் (இந்தியா

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | சுன்னாகம் | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 120 | 120 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 85 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 400 | 250 | 250 | 300 | 280 |
| தக்காளி | 160 | 160 | 120 | 140 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 60 | 80 | 80 | 80 |
| கோவா | 90 | 120 | 80 | 120 | 100 | 120 |
| கரட் | 100 | 200 | 140 | 200 | 160 | 180 |
| பூசணி | 50 | 60 | 40 | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 60 | 50 | 100 | 100 | 80 |
| வாழைக்காய் | 80 | 120 | 80 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 130 | 140 | 200 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 120 | 130 | 120 | 140 | 120 | 130 |
| பாகற்காய் | 200 | 280 | 150 | 100 | 200 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 70 | 100 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 140 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 | 60 | 60 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 120 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 60 | 40 | 60 | 60 | 40 |
| கறிமிளகாய் | 150 | 160 | 100 | 150 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 40 | 60 | 40 | 60 |
| போஞ்சி | 180 | 200 | 100 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 120 | 80 | 120 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 | 60 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 70 | 65 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | — | 150 | 200 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 30 | 80 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 10 | 40 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 80 | 50 | — | 60 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிகர்களின் வாழ்வில் அவர்கள் தங்கள் சுய நிலையை மறப்பதே இலட்சியம் ஆகும்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கிறுக்கல் சித்திரமாக தமிழ் அரசியல் தலைமை

சீத்தலைச் சாத்தனார் என்றொரு பெரும் புலவர் இருந்தார்.

மாணவர்களுக்கு கற்பிக்கும் போது யாராவது பிழைவிட்டால் பிழை விட்ட மாணவனைத் தண்டிப்பதற்கு பதிலாக எழுத்தாணியால் தன் தலையில் குத்திக் கொள்வார்.

இதனால் அவரின் தலையில் காயத்துக்குக் குறைவில்லை. தலையில் தொடர்ந்து காயம் இருந்ததால் அவரை சீத்தலைச் சாத்தனார் என்று அழைத்தனர்.

சீத்தலைச் சாத்தனாரின் நிலைமையில் தான் இன்று தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

வாக்களித்து தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பார்கள் என்று நம்பியிருக்க, நம் அரசியல் தலைமை செய்கின்ற அத்தனை வேலைகளும் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதுடன் அவர்களின் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு கெடுதி செய்வதாகவுமே அமைந்துள்ளன.

இவற்றைப் பார்க்கும் போதெல்லாம் சீத்தலைச் சாத்தனார் போல நாம் தலையில் குத்திக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை எனலாம்.

அதிலும் குறிப்பாக எங்கள் தமிழ் அரசியல் தலைமைக்குள் இருக்கக்கூடிய சிலர், அரசாங்கத்துடன் இணைந்துவிட்டவர்கள் போல அவர்களின் செயற்பாடுகள் இருக்கின்றன.

அரசுடன் இணைந்து போவதென்பது ஒரு தவறான அணுகுமுறை என்பது நம் வாதம் அல்ல. மாறாக சாரை ஊருக்குப் போனாலும் நடுமுறி நமக்கு என்ற கொள்கையில் இருந்து நாம் இம்மியும் விலகக்கூடாது.

அதாவது அரசாங்கத்துடன் சேர்ந்து போனாலும் எதிர்த்தாலும் தமிழினம் என்பதுதான் எங்கள் நோக்கமும் குறிக்கோளுமாக இருக்க வேண்டும்.

இஃது தமிழ் அரசியல் தலைமை சார்ந்தவர்களுக்கு மட்டும் உரியதல்ல. மாறாக பெரும்பான்மை இனம்சார்ந்த கட்சிகள், தமிழ் அரசியல் கட்சிகள் என்பவற்றில் நின்று தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகளில் உறுப்பினர் பதவியைப் பெற்ற அனைத்துத் தமிழ் இனம் சார்ந்தவர்களுக்கும் பொருந்தக் கூடியது.

எங்கு நின்றாலும் தமிழர்களுக்காக – தமிழினத்துக்காக – தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழர்கள் பாடுபடுவதென்பது கட்டாயமானது.

இதைச் செய்யாமல் அரசுடன் சேர்ந்து போவது அரசுடன் சேர்ந்து பாடுபடுவது இதற்காக தமிழர்களின் அடிப்படை உரிமையை சுதந்திரத்தை விட்டுக் கொடுப்பதும் இழப்பதும் என்பது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

ஆகையால் தமிழ்ப் பிரதிநிதிகள் என்ற வகைமைக்குள் யார் இருந்தாலும் அவர்கள் தமிழ் மக்களுக்காகப் பாடுபட வேண்டுமேயன்றி தங்களின் சுயநலத்துக்காக செயற்படக் கூடாது.

அரசியலில் ஒவ்வொரு நகர்வையும் மிக நிதானமாகச் சிந்தித்துச் செயற்படுத்த வேண்டும்.

மகிந்தவுக்கு எதிராக சரத் பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பது பின்னர் மைத்திரியை ஆதரித்து அவர் வெற்றி பெற்ற பின் மகிந்த ராஜபக்ஷவுடன் சேர நினைப்பதானது மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷ, சரத் பொன்சேகா என எல்லோரிடமும் பகைப்பதாக இருக்குமேயன்றி வேறில்லை.

இப்போது சம்பந்தர் ஐயா மகிந்த ராஜபக்ஷவுக்கு கைகொடுத்து இணையலாமா என்று கேட்பது ஜனாதிபதி மைத்திரிக்கு எப்படி இருந்திருக்கும்.

எல்லாவற்றையும் போட்டுடைக்காமல் கொஞ்ச மேனும் இராஜதந்திரத்துடன் செயலாற்ற வேண்டும்.

## இலஞ்ச ஊழல் விவகாரம்
# பிரியங்கர ஜயரத்ன பிணையில் விடுவிப்பு

முன்னாள்விமானசேவைகள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பிரியங்கர ஜயரத்ன பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இலஞ்ச ஊழல் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டிருந்த வழக்கு விசாரணைக்கு வந்திருந்த போது அவரை 75,000 ரூபா பிணை மற்றும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் மேலதிக நீதவான் புத்திக கேரா கல உத்தரவிட்டுள்ளார்.

பிரியங்கர ஜயரத்ன விமான சேவைகள் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் விமான சேவைகள் அபிவிருத்தி திட்டமிடல் அதிகாரி என்ற பதவியை உருவாக்கி அதற்கு தனது பிரத்தியேக செயலாளர் ஒருவரை நியமிக்குமாறு விமான சேவைகள் திணைக்களத்தை வலியுறுத்தியமை தொடர்பிலேயே அவருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் முன்னாள் அமைச்சரின் செயலாளரும் வருகை தந்திருந்த நிலையில் அவரையும் ரூபா 75,000 பிணை மற்றும் 10 இலட்சம் பெறுமதியான சரீர பிணையில் விடுவிப்பதற்கு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் 25ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## ‘உயிர்ப்பைத் தேடி’ ஆற்றுகை நிகழ்ச்சி

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முன்னாள் துறைத் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதனின் நெறியாள்கையில் உருவான "உயிர்ப்பைத் தேடி" சக்தியைப் பகிரும் ஆற்றுகை நிகழ்ச்சி இன்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் பிற்பகல் 4 மணிக்கு கந்தர் மடம் பழம் வீதியிலமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் இடம்பெறும்.

அரங்க செயற்பாட்டுக் குழுவினர் பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் நிகழ்த்தும் இக்கொண்டாட்ட அரங்கில் ஆடல், பாடல், காண்பியம், கதைசொல்லல் என அனைத்தும் இணைந்த ஓர் அரங்காக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மஹோற்சவம்

இருபாலைகிழக்குகேணிக் குளம்பதி லிங்க விநாயகர் (பழம் பிள்ளையார்) ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழா, 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா என்பன இடம்பெறவுள்ளன. (இ-3)

## முதலீட்டாளர்கள் கருத்துக்களம்

யாழ்ப்பாணம் முதலீட்டாளர்கள் கருத்துக்களம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 மணி வரை யாழ்.ரில்கோ ஹோட்டலில் இடம் பெறவுள்ளது. (இ-3)

## கந்தபுராண எழுச்சிவிழாவின் நிறைவுநாள் வைபவம் இன்று

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் நிறைவுநாள் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.40 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம் பெறும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் இடம்பெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்கிழமை, 24 ஆம் திகதி வியாழக்கிழமை, 26 ஆம் திகதி சனிக்கிழமை, 28 ஆம் திகதி திங்கட்கிழமை, 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் நீலியாமோட்டை எனும் இடத்தில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வட மாகாண மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ-7)




அரசன் ஆச்சரியப்பட்டான். என்ன பெட்டி இது என்ற ஆவல் உந்த, அதை எடுத்துத் திறந்தான்.

ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை ஒன்று அதில் இருந்தது. அதன் மேல் தங்க நிறத்தில் பெண் குழந்தை ஒன்று தகதகவெனக் காட்சி தந்தது.

அப்போது ஒரு அசரீரி ஒலித்தது. அரசே... யாகம் வளர்க்காமலே அதன் பலனை அடைந்த அதிர்ஷ்டசாலி நீ. இந்தக் குழந்தையை எடுத்து வளர்த்துப் பெரியவளாக்கு. புத்திரி இவளால் உங்கள் குலம் புனிதமடையும் என்றது.

மன்னன் மகிழ்ந்தான். அந்தணர்களை விளித்துப் பூமியில் கிடைத்த புதையலுக்குப் பொருத்தமான பெயரொன்று சூட்டும்படி சொன்னான்.

அலர் என அழைக்கப்படும் தாமரை மலர்மேல் அவதரித்த குழந்தை என்பதால் அந்தணர்கள் அதனை அலர்மேல்மங்கை என அழைத்தனர். (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**ரச்சுப் பொருத்தம் என்றால் என்ன?**

ரச்சுப் பொருத்தம் என்பது மாங்கல்ய பொருத்தம், கயிறு பொருத்தம் என்று பொருள்படும். ரச்சுப் பொருத்தத்தில் ஆரோகணம், அவரோகணம் வந்தால் திருமணம் செய்யலாம்.

(தொடரும்)

## இரும்புச்சத்து உடலுக்கு தரும் நன்மைகள்

சோம்பல் இல்லாத சுறுசுறுப்பான இயக்கம்
ஞாபக சக்தியையும் நுண்ணறிவு விருத்தியையும் அதிகரிக்கும்
உள விருத்தியை அதிகரிக்கும்
நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்
குருதிச் சோகையை தடுக்கும்

**இரும்புச்சத்து அகத்துறிஞ்சலை தேநீர், கோப்பி,சோடா போன்ற பானங்கள் குறைக்கும்**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ எனது வீர இளைஞர்களே! உத்தம குணம் வாய்ந்த நல்லோர்களே! செயல் புரியத் தொடங்குங்கள். தேச முன்னேற்றம் என்ற தேர்ச்சக்கரத்தைக் கிளப்புவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள். பெயர், புகழ் போன்ற எந்த அற்ப விடயத்திற்காகவும் நீங்கள் நின்று திரும்பிப் பார்க்க வேண்டாம். சுயநலம் என்பதை அறவே தூர எறிந்து விட்டு வேலை செய்யுங்கள்.

❖ முதலில் ஆண்மை பொருந்திய மனிதர்களை உருவாக்குங்கள். ஆண்மை பொருந்திய மனிதர்களே நமக்கு இப்போது தேவை. சிரத்தை இல்லாவிட்டால் எப்படி ஆண்மை வாய்ந்தவர்களை உருவாக்க முடியும்.

❖ எழுந்திருங்கள்! விழித்திருங்கள்! நீங்களும் விழித்திருங்கள். மற்றவர்களையும் விழிக்கச் செய்யுங்கள். உங்களுடைய இந்த உலக வாழ்க்கை முடிவடைவதற்கு முன்னால் மனிதப் பிறவியினால் பெறுவதற்கு உரிய பெரிய நன்மையை அடையுங்கள். எழுந்திருங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்! இலட்சியத்தை அடையும் வரையில் நில்லாமல் முன்னேறிச் செல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# V.T. மகாலிங்கம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி

## சென்றலைற்ஸ் வெற்றி



வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்தமாக நடைபெறும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சென்றலைற்ஸ் தனது மூன்றாவது போட்டியில் விக்டோரியா அணிக்கு எதிராக 94 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியினை பெற்றது.

முதலில் துடுப்பாடிய சென்றலைற்ஸ் அணி 20 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 229 ஓட்டங்களை பெற்றது.

சென்றலைற்ஸ் அணியானது முன்வரிசை ஆட்டக்கரர்கள் மிக வேகமாக ஆட்டமிழக்க ஒரு கட்டத்தில் 64 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து சற்று தடுமாற பின்னர் ஜோடி சேர்ந்த ஜெனோஷன் மற்றும் ஜூலியஸ் ஆகியோர் தமக்கிடையில் இணைப்பாட்டமாக 115 ஓட்டங்களை பகிர்ந்து அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

சென்றலைற்ஸ் அணிசார்பாக அதிகபட்சமாக ஜெனோஷன் 8 நான்கு, 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும் ஜூலியஸ் 2 நான்கு, 1 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 35 ஓட்டங்களையும் கௌதமன் 3 நான்கு, 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் விக்டோரியா அணி சார்பாக ஐங்காரன் மற்றும் பிரசாத் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் பிரியன்கன் 2 இலக்கினை வீழ்த்தினர்.

பதிலுக்கு 230 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பாடிய விக்டோரியா அணி 20 ஓவர்களில் 6 இலக்கினை இழந்து 135 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. பந்துவீச்சில் சென்றலைற்ஸ் அணிசார்பாக ஜெரிக் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கிருபா 4 பந்துப் பரிமற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் மயூரன் 4 பந் துப் பரிமற்றங்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 1 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் சென்றலைற்ஸ் அணியானது இன்னும் 2 லீக் சுற்றுப் போட்டிகள் மீதமுள்ள நிலையில் காலிறுதிப் போட்டிக்கு தெரிவாகுவதற்கான சந்தர்ப்பத்தினை அதிகரித்துக் கொண்டது. (க)

# இடைக்காடு ஐக்கிய விளையாட்டு கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுத் தொடர்



சம்பியனானது புத்தூர் கலைமதி



இடைக்காடு ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் கலைமதி அணிசம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

ஐக்கியத்தின் மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது.

முதலாவது செற்றில் புத்தூர் கலைமதி அணி 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாவது செற்றில் ஆவரங்கால் மத்திய அணி 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது.

அடுத்த இரண்டு செற்களிலு ஆதிக்கம் செலுத்திய புத்தூர் கலைமதி அணி 25:20, 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று 3:1 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது. ஆட்ட நாயகனாக புத்தூர் கலைமதி அணியின் கபிலன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

# ஜொலிஸ்டாரை வென்றது அரியாலை மத்தி வி.கழகம்

## நிரோஷன் அதிரடி

யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த இருபது-20 போட்டியில் அண்மையில் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்டார் விளையாட்டுக் கழகத்தை 22 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.



நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்திய விளை யாட்டுக் கழகம் நிரோஷனின் அதிரடியில் 20 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் நிரோஷன் 8 ஆறு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 65 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்டார் அணியினர் 19.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 143 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர் பந்து வீச்சில் ஜெனன் மற்றும் லினோர்த்தன் தலா 3 இலக்குகளை சாய்த்தனர். (க)

# சிறி காமாட்சியை வீழ்த்தி இலகுவாக வென்றது சென்றலைற்ஸ்



வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சென்றலைற்ஸ் தனது இரண்டாவது போட்டியில் சிறி காமாட்சி அணிக்கு எதிராக 8 இலக்குகள் வித்தியாசத்தில் மிக இலகுவான வெற்றியினை பெற்றது.

நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பாடிய சிறி காமாட்சி அணி 12.1 பந்துப் பரிமற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 70 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

அவ் அணிசார்பாக அதிகபட்சமாக நிரோஜன் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் சென்றலைற்ஸ் அணிசார்பாக அலன்ராஜ் 2.1 பரிமற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் ஜெரிக் 3 பரிமற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கிருபா 3 பரிமற்றங்கள் புந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 71 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பாடிய சென்றலைற்ஸ் அணி 7.4 ஓவர்களில் 2 இலக்கினை மாத்திரம் இழந்து 71 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில் சென்றலைற்ஸ் அணியின் இளம் அதிரடி நாயகன் நிரோஜன் (பழம்) மிக அபாரமாகவும் அதிரடியாகவும் ஆடி 3 நான்கு, 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் ஜேம்ஸ் 1 நான்கு, 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மோகன்ராஜ் 01 இலக்கினைக் கைப்பற்றினார். (க)

# தங்கவடிவேல் ஞாபகார்த்த கரப்பந்துப்போட்டி முடிவுகள்

யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகம் நடத்தும் அமரர் க.தங்க வடிவேல் ஆசாரியாரின் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட போட்டிகளின் முடிவுகள்.

ஆவரங்கால் இந்து இளைஞர் வி.கழகத்தை எதிர்த்து தொண்டைமானாறு அண்ணா வி.க மோதியது.

இதில் 25:18, 22:25, 25:21 என்ற நேர் செற்கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க வெற்றியீட்டியது.

02வது போட்டியில் தோப்பு வாலிபர் வி.கழகத்தை எதிர்த்து நீர்வேலி காமாட்சி வி.க. மோதியது.

இதில் 25:17,25:19 என்ற நேர் செற்கணக்கில் தோப்பு வாலிபர் வி.க.வெற்றியீட்டியது.

03வது போட்டியில் புத்தூர்வளர்மதி வி.கழகத்தை எதிர்த்து ஸ்ரீமுருகன் வி.க. மோதியது.

இதில் 25:16,25:06என்ற நேர் செற்கணக்கில் புத்தூர் வளர்மதி வி.க.வெற்றியீட்டியது.

04வது போட்டியில் கலைஒளி வி.கழகத்தை எதிர்த்து சென்ரர் ஸ்ரார் புத்தூர் வி.க.மோதியது.

இதில் 23:25,20:25என்ற நேர் செற்கணக்கில் புத்தூர் சென்ரர் ஸ்ரார் வி.க. வெற்றியீட்டியது.

05வது போட்டியில் கரவெட்டி வளர்மதி வி.கழகத்தை எதிர் விவேகானந்தா வி.க. மோதியது.

இதில் 15:25,25:19,18:25 என்ற நேர் செற்கணக்கில் விவேகானந்தா வெற்றியீட்டியது.

06வது போட்டியில் மோகன்தாஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய வி.க. மோதியது. இதில் 19:25, 25:23, 21:25 என்ற நேர் செற் கணக்கில் நீர்வேலி ஐக்கிய வி.க வெற்றியீட்டியது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் விபத்தில் காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் மல்லாகத்தினை சேர்ந்த சிங்கராசா ஆனந்தராசா (வயது 65) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை சுன்னாகம் சந்திக்கு அருகில் ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதிலேயே மேற்படி நபர் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (மு-30)

# ரணிலிடமும் விசாரணை நடத்த வேண்டும்-எதிரணி

(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல் விவகாரம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டுமென கூட்டு எதிர்க்கட்சி வலியுறுத்தியுள்ளது.

ரவி கருணாநாயக்கவின் பெயர் மாத்திரமல்லாது, பிரதமர் ரணிலின் பெயரும் இந்த சர்ச்சைக்குரிய விடயத்தில் தொடர்புபடுத்தப்படுவதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வாசுதேவ நாணயக்கார மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல் மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமென நான் அந்த ஆணைக்குழுவிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்தேன். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடமும் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் பிரதமருக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தேன். பிணை முறிகொடுக்கல் வாங்கலில் பிரதமர் தனக்கு ஆலோசனை வழங்கியதாக அர்ஜுன மகேந்திரன் சாட்சியமளித்திருக்கின்றார். அதனையே முன்னிலைப்படுத்தி அந்த கடிதத்தை அனுப்பியிருந்தேன்.

ஜனாதிபதி ஆணைக்குழு இந்த விசாரணைகளில் தொலைபேசி உரையாடல் குறித்த தகவல்களைப் பெற்றிருக்கின்றது. அதில் ரவி மாத்திரமல்ல **ஹொனரபல் பிஎம்முமே** காணப்படுகின்றது. ஸ்ரீலங்காவில் வேறு பிம்கள் இல்லையே. ரவி கருணாநாயக்கவிற்கு தொடர்பு காணப்பட்டது. அதனாலேயே அந்த பெயர் இடம்பெற்றது. பிரதமருக்கும் தொடர்புகள் இருக்கின்றதா என தேடிப் பார்க்க வேண்டும். இந்த கொடுக்கல் வாங்கல் மோசடியில் பிரதமருக்கு காணப்படும் தொடர்பு குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை செய்ய வேண்டும். நாட்டின் கடன் சுமை தொடர்பில் பிரதமர் தேவுதை கதைகளை கூறியிருக்கின்றார். ஜே.ஆர்.ஜயவர்தன காலத்தில் பாரிய கடன் சுமை நாட்டிற்கு இருந்தது. அந்த கடனை அந்த அரசாங்கம் மாத்திரமல்ல அடுத்து வந்த அரசாங்கமும் மீள செலுத்தியது. இதனை பிரதமர் அறிந்துகொள்ள வேண்டும் என்றார் வாசுதேவ நாணயக்கார. (மு-11)

# புதிய வருமான வரி சட்டமூலத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி பாராளு மன்றத்தில் விவாதிக்கப்பட உள்ள உள்நாட்டு இறைவரிச் சட்டமூல வரைவை எதிர்ப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது.

தற்போது நடைமுறையில் இருக்கின்ற 2006ஆம் ஆண்டு 10ஆம் இலக்க தேசிய உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டமூலம் ஒன்று 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்பட உள்ளதாக கூறியுள்ள அவர் அதை எதிர்ப்பதற்கான சில காரணங்களையும் கூறியுள்ளார்.

புதிய சட்டமூலத்தின் படி, அனைத்து வணக்கஸ்தலங்களுக்கும் வரி விலக்களிக்கப்பட்டிருப்பது நீக்கப்பட்டு, வணக்கஸ்தலங்கள் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்களுக்கும் 14% வரி அறவிடப்பட உள்ளது.

அதேபோல் இந்த சட்டமூலத்தினூடாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு தற்போது நடைமுறையிலுள்ள 12% வரி 14% ஆக அதிகரிக்கப்பட உள்ளது.

அத்துடன் கைத்தொழில் உற்பத்தி, திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகத் தயாரிப்புக்களுக்கான வரி நிவாரணம் குறித்து நடைமுறையிலுள்ள 2006ஆம் ஆண்டு சட்டத்தின் 3ஆவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. எனினும் இவை அனைத்து புதிய முன்வரைவு இறைவரிச் சட்டமூலத்தில் நீக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த வருமான வரி சட்டமூல வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளே அன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளடக்கங்கள் அல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

இது போன்ற பல காரணங்களுக்காக இந்த சட்டமூல வரைவு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் போது அனைத்து ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைச்சர்களும் உறுப்பினர்களும் எதிராக வாக்களிக்க வேணடும் என்று அவர் கூறியுள்ளார். (மு-11)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நானே தலைவன்-மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் இன்னமும் தானே என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை, நெலும் மாவத்தையில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் புதிய வருமான வரிச் சட்டமூலம் குறித்து முன்னாள் ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார்.

புதிய வருமான வரிச் சட்டமூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைக்கு இசைவானது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு ஏற்புடையதல்ல.

ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தும் பங்களிப்பு பணத்திற்கு வரி அறவிடுதல், வாழ்க்கை போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நடுத்தர குடும்பங்களின் வரி அதிகரித்தல், சமய வழிபாட்டு இடங்களில் வரி அறவிடுதல் என்பவற்றுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இணங்க முடியாது.

இதனால், எதிர்வரும் 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் புதிய வருமான வரிச் சட்டமூலத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிக்கக் கூடாது எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (மு-11)

# இராஜினாமா வேண்டாம் விஜயதாச வேண்டுகோள்

(கொழும்பு)

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை, அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டாம் என தேரர்கள் குழுவினர் நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பௌத்த சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தேரர்கள் அடங்கிய குழுவினர் நீதி மற்றும் புத்தசாசன அமைச்சுக்கு நேற்று காலை வருகை தந்திருந்தனர்.

அமைச்சரை சந்தித்து ஆசிர்வாதம் வழங்குவதற்காகவும் பதவியை இராஜினாமா செய்ய வேண்டாம் எனக் கோருவதற்காகவும் வருகை தந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், அமைச்சர் அங்கு வருகை தராத காரணத்தினால் அதிகாரிகளை சந்தித்துவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர்.

அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தொடர்ந்தும் பதவி வகிக்க வேண்டும். எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் இராஜினாமா செய்ய வேண்டாம் எனக் கோரிக்கை விடுப்பதாக தேரர்கள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளனர். (மு-11)

# பொருளாதார கஷ்டத்தால் குடும்பஸ்தர் உயிரை மாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார கஷ்டம் காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனது உயிரை மாய்த்த சம்பவம் ஒன்று சங்கானை பகுதியில் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

சங்கானை 7ஆம் கட்டையில் வசிக்கும், ஒரு பிள்ளையின் தந்தையான வைத்தியலிங்கம் மகேஸ்வரன் (வயது 47) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் பாரவூர்தி சாரதியாக உள்ளார். பொருளாதார கஷ்டம் காரணமாக மனவிரக்தியில் இருந்து வந்துள்ளார். நேற்றைய தினம் வீட்டில் மனைவியும் மகனும் இல்லாத நேரம் வீட்டிலே தனது உயிரை மாய்த்துள்ளார்.

இவருடைய மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (மு-9,30)

# சு.கவின் 66ஆவது மாநாட்டில் சந்திரிகா-மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது மாநாட்டிற்கு முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பங்காளிக் கட்சிகளும் பங்குகொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்சியின் ஐக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்குமாறு அனைத்து தரப்பினருக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 66ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு அடுத்த மாதம் 3 ஆம திகதி கொழும்பு பொரளை கெம்பல் பார்க் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இம் மாநாட்டிற்கு சுதந்திர கட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (மு-11)

# 2017ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலை பார்வையிடலாம்

(கொழும்பு)

2017ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் வரைபுநகல் தற்போது தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வரைபு நகலை தேர்தல் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம் என்று அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

2016ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு, புதிதாக உள்ளீர்ப்பு செய்வதற்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ள பெயர்கள், நீக்கப்பட்டுள்ள பெயர்கள் என்பவற்றை கிராம அலுவலர் அலுவலகங்களில் பரிசீலிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-11)

# விசேட அதிரடிப்படை...

பலியானார்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் பருத்தித்துறைப் பொலிஸாரின் ஜீப் வண்டி ஒன்றும் காவலரணும் தாக்கி சேதப்படுத்தி தீ வைக்கப்பட்டது.

அத்துடன் அதிரடிப்படையினரின் பவள் கவசவாகனம் மீதும் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் கடந்த மாதம் 21ஆம் திகதி வல்லிபுரம் மாவடிச் சந்தியில் வைத்து கடலோரக் காவல்பணியினை முடித்துவிட்டு முகாம் திரும்பிக் கொண்டிருந்த கடலோரக் காவற்படையினர் மீது தாக்குதல் மேற்கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இதனையடுத்து மறுநாள் அப்பகுதிக்கு விரைந்த இலங்கை கடற்படைத்தளபதி தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடத்தினைப் பார்வையிட்டதுடன் இது சம்பந்தமாக பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பிலும் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு சென்றிருந்தார்.

இதனைவிடவும் யாழ்ப்பாணத்தில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் யாழ். [illegible] வைக்கப்பட்ட சம்பவம் என்பவற்றை அடுத்து பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் பணிப்பின்படி விஷேட அதிரடிப்படையினர் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவ் அணியினர் முதலாம் கட்டமாக இம் மாதம் 05, 06 மற்றும் 07ஆம் திகதிகளில் துன்னாலைப் பகுதிகளில் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டு வீடு வீடாக தேடுதல்கள் நடத்தப்பட்டது. விஷேட அதிரடிப்படையினருடனுடன் பொலிஸாரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மூன்றுநாள் நடவடிக்கையினை முடித்துக் கொண்ட விஷேட அதிரடிப்படையினர் மீளப்பெறப்பட்டிருந்தனர்.

ஆனால் மீண்டும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை விஷேட அதிரடிப்படையினரின் பீல்பைக்குடன் துன்னாலைப் பகுதியினை அண்டிய பகுதிகளில் சுற்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் வீதிச் சோதனைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இச் சுற்று ரோந்து நடவடிக்கை நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது. இவ் இரண்டு நாட்களிலும் விஷேட அதிரடிப்படையினரினால் எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (மு-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாவாந்துறை கிளை நூலகம்

## வினாத்தாள் முன்...

மாணவர்களை ஏமாற்றும் வகையிலான மோசடி நடைபெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸ் மா அதிபரின பணிப்புரையில் கம்பஹா பொலிஸார் துரித விசாரணையொன்றை மேற்கொண்டிருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய தனியார் வகுப்பு ஆசிரியர் பரீட்சை மண்டபத்தில் இருந்த சிலரின் உதவியுடன் அன்று காலை நடைபெற்ற இரசாயன விஞ்ஞானப் பாடத்தின் வினாத்தாளை மதிய இடைவேளையின் போது பெற்றுக் கொண்டுள்ளார்.

அதனைக் கொண்டு மாலையில் அடுத்த பகுதிக்கான பரீட்சை நடைபெறுவதற்கிடையில் போலியான உத்தேச வினாத்தாள் ஒன்றை தயாரித்து பரீட்சை முடிந்து வந்த மாணவர்களிடம் விநியோகித்துள்ளார்.

மாணவர்களை ஏமாற்றி தனது தனியார் வகுப்புக்கு கூடுதல் மாணவர்களை வரவழைத்துக் கொள்ளும் நோக்கில் அவர் இவ்வாறு நடந்து கொண்டுள்ளார்.

மற்றபடி பரீட்சைக்கு முன்னதாக வினாத்தாள் வெளியானதாகவோ அதன் மூலம் பரீட்சையின் நம்பகத் தன்மைக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவோ இல்லை என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை இந்த சர்ச்சை தொடர்பில் கம்பஹாவில் தந்தை, மகன் மற்றும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர் ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். (மு-11)

(இது தொடர்பான மற்றுமொரு செய்தி உள்ளே)

## டெனீஸின் இடத்...

கப்பட்ட பிரேரணையில் வேறு சில வடமாகாண சபை உறுப்பினர்களோடு இணைந்து எமது கட்சியைச் சேர்ந்த அமைச்சர் பா.டெனீஸ்வரனும் கையெழுத்திட்டதன் மூலம் அவர் அங்கம் வகிக்கும் எமது கட்சியின் அங்கீகாரம் இல்லாமல் தன்னிச்சையாகவும் நன்கறியப்பட்ட எமது கட்சியின் நிலைப்பாட்டிற்கு புறம்பாகவும் மாறாகவும் செயற்பட்டுள்ளார் என்பதால் அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு தலைமைக் குழுவினால் நேற்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தீர்மானத்தின் பிரகாரம் கடந்த 20 ஆம் திகதியில் இருந்து அதாவது நேற்றைய தினத்தில் இருந்து எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு எமது கட்சியிலிருந்து பா.டெனீஸ்வரன் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பதையும் குறித்த ஆறுமாத காலத்தில் அவரது அரசியல் நடவடிக்கைகள் கட்சியினால் அவதானிக்கப்பட்டு அக்கால முடிவில் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தமான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

ஆகவே, டெனீஸ்வரனை அமைச்சரவையில் இருந்து நீக்கும் நடவடிக்கையை விரைவாக முன்னெடுக்குமாறும், அவருக்குப் பதிலாக எமது கட்சியின் சார்பில் ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்டுள்ள விந்தன் கனகரத்தினத்தை நியமிக்குமாறும் தங்களை வேண்டிக் கொள்ளுமாறு தலைமைக் குழுவினால் நான் மேலும் பணிக்கப்பட்டுள்ளேன என அக்கடிதத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளது.(மு)

## அ.தி.மு.க...

அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் நேற்று ஒன்றிணைந்தன.

(விரிவான செய்தி 12-ம் பக்கத்தில்.

## அரசியல் கைதிக...

ளனர். உடல் சோர்ந்த நிலையிலும் இன்றைய தினம் மூன்றாவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த 2009 ஆண்டு கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளான யாழ்ப்பாணத்தை சேர்ந்த இராசதுரை திருவருள் (வயது 40), கரணவாயை சேர்ந்த மதியரசன் சுலக்ஸன் (வயது 30), நாவலப்பிட்டியை சேர்ந்த கணேசன் தர்சன் (வயது 26) ஆகியோருக்கு கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து வவுனியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்த வருடம் குறித்த வழக்கு நிறைவடையும் நிலையில் இந்த வழக்கை சட்டமா அதிபர் திணைக்களம் தெற்கில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

எனவே மீண்டும் வேறு நீதிமன்றங்களுக்கு குறித்த வழக்கை மாற்றினால் தொடர்ச்சியாக இந்த வழக்கு இடம்பெறும் என்றும் இது தண்டனை இல்லாமல் தண்டனை கொடுக்கும் நடவடிக்கையாகும்.

இது அரசியல் கைதிகளை பழிவாங்கும் நடவடிக்கை என தெரிவித்து, தமது வழக்கு வவுனியாவிலேயே நடைபெற வேண்டும் என்றும், வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றக் கூடாது என்றும், கோரி உரிய பதில் கிடைக்கும் வரையில் போராட்டத்தை தொடரவுள்ளதாக அறிவித்துள்ளனர். அத்துடன் நாளைய தினம் (புதன்கிழமை) இவர்களுடைய வழக்கு வவுனியா நீதிமன்றில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-9)

## அபிவிருத்தி உத...

யற்ற பட்டதாரிகள் விடயம் மற்றும் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடம் என்பன குறித்து கலந்துரையாடினேன்.

நிதி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சிடம் கலந்துரையாடியதன் விளைவாக ஆயிரத்து 700 பட்டதாரிகளை ஆசிரியராக சேர்க்க அனுமதி கிடைத்துள்ளது என்றார். (மு)

## வடக்கு - கிழக்கு...

தமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு முன்வைத்த யோசனைக்கே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வீடுகளை அமைப்பதற்கான கேள்வி மனுக்கள் கோரப்படவுள்ளன.

இந்தப் பணியில் தேசிய ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சால் ஏனைய அமைச்சுகளையும், நிறுவனங்களையும் இணைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த அமைச்சுக்குப் பொறுப்பான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த கல்வீட்டுக்கு மக்கள் விண்ணப்பிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (மு-11)

## ஐ.நா தீர்மானத்...

பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.

இவ்வாறு இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் டுவிற்றர் பக்கத்தில் இவ்வாறு பதிவிடப்பட்டுள்ளது.

நீதியைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் பாதிக்கப்பட்டவர்களை முன்னிறுத்தியே அந்த நீதி கிடைக்க வேண்டும் . அதில் காயங்களை ஆற்றுப்படுத்துவதற்கு வழிவகுக்கப் பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகமோ பாதிக்கப்பட்டவர்களோ வேறு எதனையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது.(மு-11)

## சர்வஜன வாக்கெ...

உள்ளூராட்சி தேர்தல்கள் புதிய அரசியல் அமைப்பு மற்றும் 20-வது திருத்த சட்டங்கள் பற்றிய விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் பிரதான கட்சிகள் கலந்து கொண்ட கூட்டம் நேற்று இரவு 9.30 மணியளவில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்றது.

இதில் உள்ளூராட்சி சபை தேர்தல்கள் பற்றி கலந்துரையாடிய பின் 20-வது திருத்தச் சட்டம் பற்றி கலந்துரையாடப்பட்டது. அதன் பின் புதிய அரசியலமைப்பு பற்றி விரிவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரன் எம்.பி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் புதிய அரசியல் அமைப்பின் தாமதம் பற்றி இரா.சம்பந்தனால் ஜனாதிபதிக்கு எடுத்தியம்பப்பட்டபோது குறிப்பிட்ட ஜனாதிபதி,

செப்ரெம்பர் முதல் வாரத்துக்கு முன் இடைக்கால அறிக்கை அரசியலமைப்பு பேரவைக்கு பாரப்படுத்தப்படும். அதிகாரப் பகிர்வு என்பது எல்லோராலும் எல்லாக் காலமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம்.

ஆனால் நாட்டில் ஒரு பிழையான பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது. புதிய அரசியல் அமைப்பு நாட்டைப் பிரிக்கும் ஒரு முயற்சியே என்ற விம்பம் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றது. இதற்கு அனுமதிக்க முடியாது.

ஆகவே இது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிங்கள மக்களிடம் முழுமையான ஒரு பிரசாரம் முன்னெடுக்கப் பட வேண்டும் என ஜனாதிபதி குறிப்பி[illegible] போது.

ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர அந்த தெளிவுபடுத்தலை தான் மக்களிடம் எடுத்துச் செல்வதாக உறுதியளித்தார்.

புதிய அரசியல் அமைப்பை சர்வஜன வாக்கெடுப்புக்கு விடும் போது தோற்றுப் போக விடமுடியாது. ஆகவே இடைக்கால அறிக்கை வந்தவுடன் அரசாங்கம் மற்றும் இரண்டு பிரதான கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன மக்களிடம் இறங்கி நல்ல பிரசாரம் செய்ய வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்திக் கூறினார். (மு-9)


### உடனடி வேலைவாய்ப்பு

எமது சர்வதேச நிறுவனத்தின் அரச அங்கீகாரம் பெற்ற இலங்கைக் கிளைகளில் சிறந்த வேலைவாய்ப்பு.
✦ பயிற்சியுடன் கூடிய நிரந்தர வேலைவாய்ப்பு ✦ எதிர்காலத்திற்கான திட்டமிடல் ✦ சிறந்த சம்பளத்துடன் கூடிய பதவியுயர்வு ✦ யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை ✦ தகைமை - ஆகக் குறைந்தது O/L ✦ திறமையானவர்களுக்கு எமது வெளிநாட்டுக் கிளைகளிலும் வேலைவாய்ப்பு ✦ 2017 ஆம் ஆண்டு A/L கற்ற மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு : 021 567 9001, 077 230 2795

(193)



### 50-வது பிறந்தநாள் வாழ்த்து



**கார்த்திகேசு பாஸ்கரன்**

(யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க செயலாளரும், நந்தினி பேக்கரி உரிமையாளரும்)

அண்ணனாய் வந்துதித்த
அன்னையே வாழ்க
எங்கள் அம்மா தந்த - இன்னுமொரு
அம்மாவே வாழ்க
பாஸ்கரன் இது ஒரு பெயர் மட்டுமல்ல
பாஸ்கரன் ஒரு வரலாறு
பாஸ்கரன் ஒரு யுகம்
பாஸ்கரன் ஒரு சரித்திரம்
எமக்கு மட்டுமல்ல எம்மை
உருவாக்கியவர்களுக்கும்
பெரியவன் - நீ தான்
வேசம் போடத்தெரியாத
பாசக்காரனே வாழ்க
தேசம் காத்தவனின் குணம் உனது
வீசும் காற்று நின்று
போனாலும் எமக்கான
உன் பாடுகளை - மறவோம் நாம்
காசும் பணமும் உன் கால் தூசு
பேசும் போது நீ
வீசும் தென்றல் காற்று
உனை போற்றி போற்றியே எம்
ஆயுள் முடிக்க அருள் புரிக!
உன் பிஞ்சு வயதிலேயே - எம்மை உன்
குஞ்சுகளாய் காத்தவன் நீ
வஞ்சம் அறியா உன் நெஞ்சருகில்
தஞ்சை பெருங்கோவிலும் சிறிது எமக்கு

மதியாதோர் வாசல் மிதிக்காமல்
எம்மை வளர்த்து வழிநடத்தும்
வள்ளலே வாழ்க!
பாசத்திலும் கோபத்திலும்
முதல்வனே - வாழ்க!
அன்னையும் பிதாவும் முன்னறி
தெய்வம் என்று
முளையிலேயே ஊட்டியவன் நீ
எங்கள் அனைவரையும் செதுக்கிய
சிற்பியே - வாழ்க!
சகோதரத்துவம் என்னும் பட்டயத்தின்
பீடாதிபதியே - வாழ்க!
ஆகாயத்தை அளவிடலாம் -உன்
அன்பை அளவிட யாரால் முடியும்?
எம்மை பள்ளிக்கு அனுப்புவதற்காய்
கல்வி துறந்த தியாகியே - வாழ்க
நாம் கண்ட அனர்த்தங்களின்
போதெல்லாம்
எம்மை அரவணைத்த காவலனே
- வாழ்க!
மொத்தத்தில் - நீ தான் நாங்கள்
நாங்கள் தான் நீ
வாழ்க பல நூறாண்டு
எங்கள் தலைவனாய்
எங்கள் பெரியவனாய்
எங்கள் அண்ணனாய்
எங்கள் அனைத்துமாய்
வாழ்க வாழ்க வாழ்க...

ஐயா, அம்மா,
உடன்பிறப்புக்கள்
இல.43, 1-ம் குறுக்கு மணிப்புரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.



### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9338)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



### V2 TRAVELS

PASSPORT

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION FOR FOREIGN PASSPORT (வீசா எக்ஸ்ரென்சன்)

(C-9334)

0768227499

VISA

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



### வீட்டுடன் காணி விற்பனை

நாவலர் வீதி, நாவாந்துறையில் வீட்டுடன் கூடிய காணி (1 3/4 பரப்பு) விற்பனைக்குண்டு. (வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு

தொடர்பு : 0764687762

(190)



### வேலையாட்கள் தேவை

சாரதி 30 - 45 வயதிற்குட்பட்டவர்கள் - ஆண், கணனி அனுபவமுள்ள பெண் வேலையாள் தேவை.

தொடர்பு : 0772299566, 0212212306

(191)



### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

புறோயிலர் குஞ்சு, கல்பேட் குஞ்சு, ஊர்க்கோழிக்குஞ்சுகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு : 0764481101

(192)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org